உ
சிவமயம்

# சைவநீதி
# SAIVANEETHI


| மலர் 9 | பார்த்திப - ஆடி | July- August 2005 | இதழ் 4 |
|---|---|---|---|


## நூறாவது இதழ்



ரூபா 25/=

# பொருளடக்கம்


பக்கம்

1. நலம் பல நல்கும் நல்ல பதிகங்கள் .................................... 2
2. கந்தபுராணம் பாடிய காஞ்சிவளர் கற்பகதரு ............................ 3
3. திமுறைப் பெருமை ........................................................ 4
4. சைவ சித்தாந்த வாழ்க்கை நெறி ........................................ 8
5. இந்தச் சரீரம் ஏன் கிடைத்தது ........................................... 13
6. பக்திமைப் பாடல்களின் தோற்றமும் வளர்ச்சியும் ...................... 14
7. சந்தேகம் தெளிதல் ......................................................... 17
8. வேதாந்தத் தெளிவே சைவ சித்தாந்தம் .................................. 18
9. திருத்தொண்டின் நெறி வாழ .............................................. 20
10. எனது வாழ்க்கையில் சாதுக்கள் தரிசனம் ............................ 21
11. நம்பிக்கை ................................................................. 23
12. சிவபாத சுந்தரனார் குருபூசை ........................................... 27
13. கொழும்புத் தமிழ்ச் சங்கப் பண்டித மாணவர்கள் சார்பாக அமரர் பண்டிதர் சரவணமுத்து சுப்பிரமணியம் அவர்கள் சிவபதம் அடைந்ததையிட்டு சாற்றிய வெண்மலர் .................. 28



சைவநீதி இதழில் வெளிவரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்.

- இதழ் நிர்வாகிகள்

உ
சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவநீதி





மலர் 9 பார்த்திப - ஆடி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் - 04



**தொடக்குனர்:**
கலாபூஷணம், ஞானசிரோமணி,
சைவப்புலவர்மணி, வித்துவான்,
**திரு. வ. செல்லையா**

**மதியுரைஞர்:**
**சிவஸ்ரீ. கு. நகுலேஸ்வரக்குருக்கள்**

**திரு. D. M. சுவாமிநாதன்**
அறங்காவலர்,
ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்

**திரு. அ. கந்தசாமி**
*Chairman U.P.S.*

**திரு. கு. மகாலிங்கம்**

**பதிப்பாசிரியர்:**
**திரு. வே. திருநீலகண்டன்**
லக்ஷ்மி அச்சகம்

**விநியோகம்:**
**திரு. க. சீனிவாசகம்**
ஓய்வுபெற்ற கோட்டக் கல்வி அதிகாரி

**நிர்வாக ஆசிரியர்:**
**திரு. செ. நவநீதகுமார்**
30, ரம்யா றோட், கொழும்பு-04.

தொடர்புகட்கு: *7.30 p.m. to 7.30 a.m.*

தொலைபேசி: 2580458


## தமிழோடிசை பாடல்

இறைவனைப் பாடிப்பணிவதற்கு உரிய பாடல்கள் திருமுறைப் பாடல்கள். தனிவழிபாட்டிலும்சரி பொதுவழிபாட்டிலும் சரி தேவாரம் திருவாசகம் ஓதல் அவசியமானது. எமது சமயச்சடங்குகள், விழாக்கள் போன்றவற்றிலும் ஓதப்படுபவை திருமுறைப் பாடல்கள். ஒரு காலத்தில் மறைந்திருந்த இப்பாடல்களின் பெருமையை அறிந்த இராஜராஜ சோழர் இவற்றை அரும்பாடுபட்டுத் தேடி எடுத்து நம்பியாண்டார் நம்பி மூலம் திருமுறையாக வகுத்துச் சைவஉலகிற் பரவச்செய்தார்.

அக்காலத்தில் கோயில்களில் பண்ணோடு பாடவல்லவர்களை ஓதுவார்களாக அமர்த்தினர். கேட்போர் உள்ளம் உருகும் வண்ணம் கோயில்களில் திருமுறைப்பாடல்கள் ஒலித்தன. நித்திய, நைமித்திய பூசைகளில் உரியமுறையில் திருமுறைப்பாடல்கள் பாடி வழிபாடு நடந்தது.

பன்னிருதிருமுறைகளுள், தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் எனத் தொகுத்து **"பஞ்சபுராணம்"** எனத் திருவிழாக்களில் ஓதப்பட்டுவந்தன. இங்கு திருப்புராணம் பாடும்போது பெரியபுராணப் பாடல்கள் மாத்திரமே பாடப்படல் வேண்டும் என்ற நியதி உண்டு. பஞ்சபுராணத்தோடு முருகன் கோயில்களில் திருப்புகழ் பாடும் மரபும் உண்டு.

இன்று உரிய பண்ணிற் தேவாரம் பாடுதல் அரிதாகிவருகின்றது. பஞ்சபுராணத்தில் இடம்பெறாத பாடல்கள் பாடப்படுகின்றன. மகோற்சவக் காலத்தில் நவசந்திப் பண்பாடும்போது ஏதோ தேவாரம் பாடினால் போதும் என்ற நிலைகூடச் சில கோயில்களில் உண்டு. உரியவர்கள் இதனைக் கருத்திற்கொண்டு மரபுபேணி, வரும் சந்ததியினருக்கு வழிகாட்டவேண்டும்.

தினம்தோறும் வழிபாட்டிலே ஒவ்வொருவரும் ஒரு பதிகத்தையாவது முழுமையாகப் பாராயணம் செய்ய வேண்டும். இப்பழக்கத்தைச் சிறுவயது முதலே குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்திப் பாராயணம் செய்ய வழிவகுக்க வேண்டும். வீட்டிலே பொங்கல், பூசை நிகழும்போது தேவாரம் பாடும்படி கூறினால் பாடமுடியாத நிலையில் பலர் உள்ளனர். இதற்குக் காரணம் நாம் திருமுறைகளைப் பாராயணம் செய்வதில்லை. **"தமிழோடிசை பாடல் மறந்தறியேன்"** என்பார் அப்பரடிகள்.

துயர் நீங்குவதற்கு, நாளும் ஒருபதிகம் ஓதல் வேண்டும். தினம்தோறும் காலையில் அல்லது மாலையில் நீராடி இறைவனை வழிபடும்போது குடும்பத்திலுள்ளவர்கள் கூட்டாகவோ தனியாகவோ பதிகம் பாடிப் பணிதல் வேண்டும்.

# நலம் தரும் பதிகங்கள்

## பதிகம் 2

**திருநள்ளாறு** **பண் : பழந்தக்கராகம்**

சனிக்கிரகத்தால் வரும் எல்லாவித தோஷமும் போக்கி சனிபகவானால் வரும் தோஷங்கள் நீங்க யாவரும் திருநள்ளாறு செல்வது தெரிந்ததே. சம்பந்தப் பெருமான் பாடியருளிய இப்பதிகம் அனல் வாதத்தின்போது வேகாமல் நின்ற "பச்சைப் பதிகமாகும்". இப்பதிகத்தை பாராயணம் செய்பவர்களும் வினையினால் (சனிக்கிரகத்தினால்) பாதிக்கப்பட மாட்டார்கள் என்பது சொல்லாமல் விளங்கும்.

திருச்சிற்றம்பலம்

போகமார்த்த பூண்முலையாள் தன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண்வெள் ளேற்றண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவண ஆடையின் மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே. 1

தோடுடைய காதுடையன் தோலுடையன் தொலையாப்
பீடுடைய போர்விடையன் பெண்ணுமோர் பாலுடையன்
ஏடுடைய மேலுலகோடு ஏழ்கடலுஞ் சூழ்ந்த
நாடுடைய நம்பெருமான் மேயது நள்ளாறே. 2

ஆன்முறையா லாற்ற வெண்ணீறாடி அணியிழையோர்
பான் முறையால் வைத்தபாதம் பத்தர் பணிந்தேத்த
மான்மறியும் வெண்மழுவும் சூலமும் பற்றிய கை
நான் மறையான் நம்பெருமான் மேயது நள்ளாறே. 3

புல்கவல்ல வார்சடை மேற்பூம்புனல் பெய்தயலே!
மல்கவல்ல கொன்றை மாலை மதியோடுடன் சூடிப்
பல்கவல்ல தொண்டர் தம் பொற்பாத நிழற்சேர
நல்கவல்ல நம்பெருமான் மேயது நள்ளாறே. 4

ஏறுதாங்கி யூர்திபேணியேர்கொள் இளமதியம்
ஆறுதாங்குஞ் சென்னிமேலோர் ஆடரவஞ்சூடி
நீறுதாங்கி நூல்கிடந்த மார்பில் நிரை கொன்றை
நாறு தாங்கும் நம்பெருமான் மேயது நள்ளாறே. 5

திங்களுச்சி மேல்விளங்கும் தேவன் இமையோர்கள்
எங்களுச்சி யெம்மிறைவன் என்றடியே யிறைஞ்சத்
தங்களுச்சி யால்வணங்குந் தன்னடியார் கட்கெல்லாம்
நங்களுச்சி நம்பெருமான் மேயது நள்ளாறே. 6

வெஞ்சுடர்த்தீ அங்கையேந்தி விண் கொண்முழவதிர
அஞ்சிடத்தோர் ஆடல் பாடல் பேணுவதன்றியும் போய்ச்
செஞ்சடைக்கோர் திங்கள் சூடித்திகழ்தரு கண்டத்துள்ளே
நஞ்சடைத்த நம்பெருமான் மேயது நள்ளாறே. 7

சிட்டமார்ந்த மும்மதிலுஞ் சிலைவரைத் தீயம்பினால்
சுட்டுமாட்டிச் சுண்ணவெண்ணீறாடுவதன்றியும் போய்ப்
பட்ட மார்ந்த சென்னிமேலோர் பால்மதியஞ்சூடி
நட்டமாடும் நம்பெருமான் மேயது நள்ளாறே. 8

உண்ணலாகா நஞ்சு கண்டத்துண்டுடனே யொடுக்கி
அண்ணலாகா வண்ணல் நீழல் ஆரழல் போலுருவம்
எண்ணலாகாவுள் வினை என்று எள்க வலித்து இருவர்
நண்ணலாகா நம்பெருமான் மேயது நள்ளாறே. 9

மாசு மெய்யர் மண்டைத்தேரர் குண்டர் குணம் இலிகள்
பேசும் பேச்சை மெய்யென்றெண்ணி யந்நெறிச்செல்லன் மின்
மூசுவண்டார் கொன்றைசூடி மும்மதிலும் உடனே
நாசஞ்செய்த நம்பெருமான் மேயது நள்ளாறே. 10

தண்புனலும் வெண்பிறையுந் தாங்கிய தாழ்சடையன்
நண்பு நல்லார் மல்கு காழி ஞானசம்பந்தன் நல்ல
பண்பு நள்ளாறேத்து பாடல் பத்தும் இவைவல்லார்
உண்பு நீங்கி வானவரோடு உலகிலுறைவாரே. 11

(பதிகம் முற்றிற்று)

திருச்சிற்றம்பலம்

# கந்தபுராணம் பாடிய காஞ்சிவளர் கற்பகதரு

வ. குகசர்மா

தமிழ்ப் புராணங்களுள் சிறந்து விளங்குவன மூன்று புராணங்களாகும். அவை கந்த புராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் என்பனவாகும். இவற்றுள் கந்தபுராணம் முருகப் பெருமானுடைய பெருமையைக் கூறுவது. இனிய விருத்தப் பாக்களால் ஆயது. ஆற்றோட்டம் போலும் அமைதியுடையது. வடமொழியில் பதினெண் புராணங்களில் ஒன்றாகவுள்ள ஸ்கந்தபுராணத்தைத் தென்மொழியிற் பாடியவர் கச்சியப்பசிவாச்சாரியார் ஆகும்.

செந்தமிழ் தெரிந்த புலவர்கள் செறிந்த இடம் காஞ்சிபுரம். இது பெரியோரால் கூறப்பட்ட காசி முதலாய ஏழு புண்ணியத் தலங்களில் ஒன்றாகும். இங்கே சிவபெருமான் ஏகாம்பரேஸ் வரர் என்னும் பெயருடன் வீற்றிருக்கிறார். இங்கு பல ஆலயங்கள் உண்டு. அவற்றுள் ஒன்று குமரகோட்டம் எனப்படும் கோயிலாகும். இங்கே கோயிலின் அர்ச்சகராக விளங்கியவர் காளத்தியப்ப சிவாச்சாரியராகும். அவருடைய மைந்தனே கச்சியப்பசிவாச்சாரியராகும். இவர் வடமொழி தென்மொழி ஆகிய இரு மொழிகளிலும் புலமை பெற்று விளங்கினார்.

காஞ்சிப் பகுதியில் உள்ள பெரியோர்கள் முருகப் பெருமானுடைய சரித்திரத்தைக் காப்பிய முறைப்படி பாடித்தர வேண்டுமெனக் கேட்டார்கள். கச்சியப்பரும் அதற்குச் சம்மதமுடையவராகி முருகப் பெருமானுடைய அருளை வேண்டி நின்றார். முருகப் பெருமானும் அவர் கனவிலே தோன்றி "திகடசக்கர" என முதலடியை எடுத்துக் கொடுத்து "கந்தபுராணத்தைப் பாடுக" என அருள் புரிந்தார். முருகப் பெருமானுடைய அருட்படி ஒவ்வொரு நாளும் நூறு பாடல்கள் பாடித் தாம் வழிபாடு செய்யும் முருகப் பெருமானுடைய பாதங்களிலே அந்தப் பாடல்களை வைத்து விடுவார்.

மறுநாள் சென்று அவற்றை எடுத்துப் பார்க்கும் போது சில இடங்களில் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கும். இதனைக் கண்டு முருகனருளை வியந்த கச்சியப்ப சிவாச்சாரியார் பத்தாயிரத்து முந்நூற்று நாற்பத்தாறு பாடல்களால் பாடி முடித்தார்.

புராணத்தை அரங்கேற்றும் நாள் வந்தது. புலவர் குழாம் கூடிய அவையிலே "திகடசக்கரச் செம்முக மைந்துளான்" என்ற காப்புச் செய்யுளை "திகழ்தசக்கரம்" எனப் பிரித்து பொருள் சொல்லும் போது புலவர் ஒருவர் தடுத்தார். "திகழ்த்த சக்கரம்" "திகடதுக்கரம்" எனச் சேர்வதற்கு விதியைக் காட்டும்படி அவர் கேட்டார். இது முருகப் பெருமானுடைய வாக்கு எனக் கச்சியப்பர் கூறியதை புலவர் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே அரங்கேற்றம் மறு நாளைக்குப் பின் போடப்பட்டது.

மறுநாள் முருகப் பெருமானே புலவர் வேடம் கொண்டு வந்து வீரசோழியம் என்னும் இலக்கண நூலில் விதிகாட்டிப் புலவர் சந்தேகத்தைத் தீர்த்து வைத்தார். எனவே "வாதமுறு புலவர் குழாம் மகிழ்ந்து போற்றக் கந்தபுராண அரங்கேற்றம் குமரகோட்டத்தில் இனிது நிறை வெய்தியது. காஞ்சிவளர் கச்சியப்பக் கற்பக தருவை இறைஞ்சிக் கருத்துள் வைப்பாம்."

> **துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்**
> **வேண்டிய எல்லாம் தரும்** 651
>
> ஒருவனுக்குத் துணைநலம் ஆக்கத்தைக் கொடுக்கும், வினை நலம் (வினைத்தூய்மை) வேண்டிய எல்லாவற்றையும் தரும்.

# திருமுறைப் பெருமை

ச. குமாரசாமிக்குருக்கள்

சிவபெருமானுடைய திருவருளைப் பெற்ற திருஞானசம்பந்த சுவாமிகள் முதலிய உண்மை நாயன்மாராற் திருவாய் மலர்ந்தருளப் பெற்றனவும், வேதாந்தத் தெளிவாஞ் சைவ சிந்தாந்தத்திறனைத் தெரிவிப்பனவும் ஆகிய தேவாரம் முதல் திருத்தொண்டர் புராணம் இறுதியாயுள்ள திருப்பாடல்களே திருமுறை எனப்படும். அவை பன்னிரு திருமுறையாகப் பகுக்கப்பட்டுள்ளன. திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த தேவாரம் முதன் மூன்று திருமுறையும், திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த தேவாரம் பின் மூன்று திருமுறையும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த தேவாரம் ஏழாந் திருமுறையும், மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருவாசகம் திருக்கோவையார் என்னுமிரண்டும் எட்டாந் திருமுறையும், திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பதின்பர் அருளிச்செய்த திருவிசைப்பாவும் அவருட் சேந்தனார் அருளிச் செய்த திருப்பல்லாண்டும் ஒன்பதாந் திருமுறையும், திருமூலநாயனார் அருளிச் செய்த திருமந்திரம் பத்தாந் திருமுறையும், திருவாலவாயுடைய சிவபிரான் முதலாயினோர் அருளிச்செய்த திருமுகப்பாசுரம் முதல் நாற்பது பிரபந்தங்களும் பதினொராந் திருமுறையும், சேக்கிழார்நாயனார் அருளிச்செய்த திருத்தொண்டர் புராணம் பன்னிரண்டாந் திருமுறையுமாம்.

தேவாரம், திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், திருமுகப்பாசுரம் முதலிய பிரபந்தம் என்னுமிவைகளை அபயகுலசேகர சோழ மகாராசா வேண்டுதல் செய்ய, பொல்லாப் பிள்ளையாருடைய அனுக்கிரகத்தைப் பெற்ற நம்பியாண்டார்நம்பி மந்திரங்கள் பதினொன்றாதல் பற்றி, பதினொரு திருமுறைகளாக வகுத்தருளினார். திருத்தொண்டர் புராணம் அநபாயசோழ மகாராசா காலத்தில் பன்னிரண்டாந் திருமுறையாக வகுத்தருளப்பட்டது.

இத் திருமுறைகள் திருஞானசம்பந்த சுவாமிகள் முதலிய நாயன்மாராற் கூறியருளப்பட்டதாயினும், சிவபெருமானே அவர்களை அதிட்டித்து நின்று அவைகளைத் தோற்றுவித்தலால், அவை சிவபெருமானால் இயற்றியருளப்பட்டனவேயாம். பேய் பிடித்தவன் வாய் சொற்களெல்லாம் பேயின் சொற்களேயன்றி அவன் சொற்களாகாதவாறு போலச் சிவபெருமானால் அதிட்டிக்கப்பட்ட நாயன்மார் கூறியருளிய திருமுறைகளெல்லாம் அச்சிவபெருமான் திருவாக்கேயாம்.

அருகசமயமும் புத்தசமயமும் எல்லாவிடங்களிலுந் தலைப்பட்டுச் சைவங் குன்றிய அக்காலத்தில் தேவார முதலிய திருமுறைப் பாக்களே அப்புறச்சமயங்களை ஓட்டிச் சைவ சமயத்தை நாட்டியன. திருவிளை யாடற் புராணத்திலே இடைக் காடனார் பிணக்குத் தீர்த்த படலத்திலே சொக்கநாதசுவாமி தமதடியவருள் ஒருவராகிய இடைக்காடனார் பாண்டியன் மீது

**என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு**
**நன்றி பயவா வினை** 652

ஒருவன் புகழும் நன்மையும் தராத தூய்மையற்ற செயல்களை எக்காலத்திலும் செய்யாமல் விட்டு விடுதல் வேண்டும்.

பொருள் பெறவிரும்பிப் பாடிய பாக்களை அவன் சபையில் அரங்கேற்ற, அவன் அதைச் சிறிது அவமதித்தமையைப் பொறுக்கமாட்டாது திருக்கோயிலை விட்டகன்று உத்தரமதுரையிலே போய் எழுந்தருளியிருந்தாரென்னுந் திவ்விய சரித்திரத்தினாலே, அவர் சிவானுபூதிச் செல்வர்க ளாகிய சமயகுரவர் முதலாயினோர் தம்மீது பாடிய தேவார முதலிய திருமுறைகளை நாம் போற்றிப் புகழ்ந்து தமது திருக்கோயில் முதலியவற்றில் ஓதாமல் விடுவோமாயின் அதனைப் பொறுக்கமாட்டாரென்பதும், அங்கே விளங்கி நின்று அருள் செய்யாரென்பதும் பெறப்படும்.

காமுகனானவன் தன் வாய்ச் சொல்லினும் தம்பால் விரும்பப்பட்ட காமக்கிழத்தியர் வாய்ச்சொல்லிலே மிகவும் பற்றுடையனாய் மகிழ்ச்சி அடைவன். அதுபோலச் சிவபெரு மானும் தமது வாய்ச் சொல்லாகிய வேதாகமங்க ளினுந் தம்மால் விரும்பப்பட்ட அடியவர் வாய்ச்சொல்லாகிய தேவார முதலிய திருமுறைகளிலே மிகவும் பற்றுடையராய் மகிழ்ச்சி அடைவர்.

இத்திருமுறைகள் ஆன்மாக்களுக்குப் பிறவிப்பிணி தீர்த்து மோக்ஷத்தைக் கொடுக்க வல்லன. தமிழ் மறையிலுள்ள திருப்பதிகங்களை அத்தியயனம் பண்ணும் பலன்கள் அவ்வப்பதிகங்க ளிடத்தே உரைத்தருளப்பட்டன.

பன்னிரு திருமுறைகளும் பன்னிரு மந்திர நிறைப்பொருளாகலானும், முத்தமிழ் விரவியன ஆகலானும், ஒன்றிரண்டென வகுக்கப்பட்டன ஆகலானுந் தொடர்ச்சியுடையன. திருமுறைகளை அம்முறைக்கிரமமாகவன்றி மாறி ஓதுதல் குற்றமாம். புராணம் ஓதி முடிந்து பின்னர்த் தேவாரம் ஓதத் தொடங்குதலும், இது போலவே மாறி மாறி ஓதுதல் செய்வதும் கூடாதாம். பன்னிரு திருமுறைகளையும் விதிப்படி ஓதுகின்றவர்களைச் சிவபெருமானாகவே பாவித்தல் வேண்டும். திருமுறை ஓதுபவர்கள் மதுமாமிசபக்ஷணமில்லாதவராய், சைவாசார முடையவராய், சிவதீட்க்ஷை பெற்றவராய், விபூதி ருத்திராக்ஷதாரண முடையவராய் இருத்தல் வேண்டும். இன்னுமவர்கள் இலக்கிய இலக்கணங்களிலும் சித்தாந்த சாத்திரங்களிலும் வல்வராயும் சிவபக்தி சிவனடியார்பக்தி திருமுறைப்பக்தி உடையவராயும் இருத்தல் வேண்டும்.

இவ்வியல்பினரல்லாதவர், பண்வழிப்பாடாது தாம் நினைத்தபடி எல்லாம் பாடுவோர், சிவதீக்ஷையில்லாதவர், சிவசின்னமில்லாதவர், சிவநிந்தகர், திருமுறைகளை ஓதும்போது அதற்கு முன்னும் பின்னும் இடையினும் வேறு பாடல்களைப் பாடுவோர், ஆசாரமில்லாதவர் என்னுமிவர்களும், இவைபோன்ற குற்றமுடைய வர்களும் திருமுறைகளைத் தீண்டுதற்கும் அதிகாரிகள் அல்லர்.

திருமுறைகளை மெய்யன்புடன் ஓதுபவர்களும், ஓதுவிப்பவர்களும், கேட்கிறவர்களும், ஆன்மார்த்த பூசையாகப் பூசிக்கின்றவர்களும் சிவனடியாராகிய சிவபக்தரென்று சொல்லப்படுவார். திருஞானசம்பந்த சுவாமிகள் "பந்தமார் தமிழ் பத்தும் வல்லார் பத்தராகுவரே" "பயில்வோடு கற்று வல்லவ ருலகினி லடியவரே" எனவும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் "இம்மாலை.....பாருரும் பரவித்தொழவல்லார், பத்தராய் முத்திதாம் பெறுவாரே" எனவும் திருவாய் மலர்ந்தருளினார்கள்.

---

**ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை**
**ஆஅதும் என்னு மவர்** 653

'நாம் மேன்மேலும் உயர்வோம்' என்னும் உயர்வெண்ணம் கொண்டவர் தம் மதிப்புக் கெடுவதற்குக் காரணமான செயல்களைச் செய்யாது விட்டு விடுதல் வேண்டும்.

திருமுறை ஓதுகிறவர் முற்கூறப்பட்ட இலக்கணமுடையவராய், ஒருவராவது பலர் சேர்ந்தாவது ஓதக்கடவர். பாடும் பொழுது உடற்றொழிற்குற்றம், பாடுந் தொழிற் குற்றம், பண் குற்றம், எழுத்துப்பிழை, சொற்பிழை, பொருட்பிழை, ஓதும் வரிசைப் பிறழ்ச்சி என்னும் குற்றம் வராதபடி பாடுதல் வேண்டும். துவட்டா என்பவன் எழுத்தொலி பிறழ வுச்சரித்து யாகம் புரிந்தமையால் இந்திரனாற்றலை அறுப்புண்டான். இந்திரன் பிரமகத்திநோயால் வருந்தினான். அத்தன்மை போல இக்குற்றம் நிகழின் ஓதுவோர் ஓதுவித்தோருக்குப் பெருந்துன்பம் நேரிடும்.

திருமுறைகளை ஓதும் போது வேறொன்றையும் ஓதல் கூடாது. சிலர் தேவாரம் முதலிய திருமுறைகளை ஓதுங்காலத்தில் திருப்பாசுரத்திலில்லாத மொழிகளைச் சேர்த்துக் கூறுகின்றார்கள். அதற்கு உதாரணமாக, "வடிவுடை மழுவேந்தி (சம்போ! சங்கரா!) மதகரி யுரிபோர்த்து (வாமதேவா)" என்று பாடுகிறார்கள். அது குற்றமும் பாவமுமாம். அச்சொற்கள் சிவநாமங்களாயினுமாகுக; இவற்றாற் கேட்போர்க்குப் பத்தி விளையினும் விளைக; அப்படிக் கூறுதல் தாகதென்பதே ஆன்றோர் கொள்கை. எதற்காக வெனில், ஒரு பதங் கூடினும் கந்தபங்க முதலியன உண்டாகும்.

திருமுறையோதுங் காலத்தில் சிலர் சண்டையிட்டுக் கொண்டும், போர்த்துக் கொண்டும், சிரித்துக் கொண்டும், கால்களை நீட்டிக் கொண்டும், ஆலயங்களும் மூர்த்திகளும் கீழிருப்பத் தாம் மேல் மாளிகையில் இருந்து கொண்டும், உத்தரீயம் இட்டுக் கொண்டும், பிற கதைகளை இடையிடையே பேசிக்கொண்டும் ஓதுதலும் கேட்டலும் கூடாது. திருமுறையை ஓதுவதற்கு முன்னர்க் கிழக்கு முகமாகவேனும் வடக்கு முகமாகவேனும் உட்கார்ந்து விநாயகரைத் தியானித்து, சிவபிரானையும், உமாதேவியாரையும், சமயா சாரியர்களையும் சிந்தித்து, ஒவ்வொரு திருப்பாட்டின் முதலிலும், முடிவிலும் "திருச்சிற்றம்பலம்" என்று சொல்லுதல் வேண்டும். விநாயகரைத் துதிக்க வேண்டு மேல் "பிடியத னுருவுமை கொளமிகு கரியது" என்பது முதலாகிய விநாயகரை உரைத்த திருப்பதிகங்களைக்கூறி, அப்பால் திருஞான சம்பந்தசுவாமிகள் பதிகங்களில் எத்தனை பாராயணம் பண்ண வேண்டுமோ அது செய்து, திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள் முதலாயினோர் திருப்பாசுரங்களைப் பாராயணம் செய்து, பெரிய புராணம் சொல்லி முடித்தல் வேண்டும்.

சுப்பிரமணிய ஆலயமாயிருந்தால் கந்தசுவாமியைப் பற்றிக் கூறும் தேவாரங்களையும், வீரபத்திராலயமாயிருந்தால் தக்ஷ யாக சம்மாரம் பற்றிக் கூறும் திருப்பாக்களையும் உமாதேவியார் சந்நிதான மாயிருப்பின் அவரைப்பற்றி விதந்து கூறிய திருப்பாடல்களையும் சொல்லுதல் வேண்டும். திருமுறையோதுங் காலத்திலே கேட்பவர் எல்லோரும் பயபக்தியுடன் சப்பாணியில் இருந்து கையிரண்டையும் மார்பில் மாறிக் கட்டிக் கொண்டாவது அஞ்சலி செய்து கொண்டாவது இருத்தல் வேண்டும். பாராயணம் செய்வோர் "நமப்பார்வதீபதயே" என்று கூறும் பொழுது "ஹரஹரமஹாதேவா" என்று உச்சரித்தல் வேண்டும். "சிற்சபேசா" என்று கூறும் பொழுது "சிவசிதம்பரம்" என்று சொல்லுதல் வேண்டும். தேவாரம் முதல் பெரிய புராணம் இறுதியாகிய திருமுறைகள் ஓதப்பட்ட பின்பன்றி நிறுத்தலும், பிறவிடயங்களைச் செய்தலும், சபையைவிட்டுப் போதலும் கூடாவாம்.

**இடுக்கண் படினும் இழிவந்த செய்யார்**
**நடுக்கற்ற காட்சி யவர்** 654

அசைவில்லாத தெளிந்த அறிவுடையவர் தாம் துன்பத்தில் அகப்பட்டாலும் அத்துன்பத்தை தீர்ப்பதற்காகத் தமக்கு இழிவுதரும் செயல்களை செய்யமாட்டார்.

சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் தாவரமாகிய சிவலிங்கம் முதலிய மூர்த்திகள், சங்கமமாகிய சிவனடியார் திருவேடம் என்னுமிவை விசேடித்தன. திருமுறைத் திருவருட்பாக்கள் தாவர சங்கமப் பொருள்களையும் அவற்றிலிருந்து அருள் செய்யும் சிவபெரு மானையும் அடக்கி நிற்றலின் மிக மிக விசேடித்தன. எல்லாவற்றையும் அடக்கி நிற்கும் சிவபெருமானையும் தமது இருதயத்தில் அடக்கி நிற்பவர் ஆதலின் தொண்டர்கள் யாரினும் பெரியவர். நாவல் மரத்தில் எழுந்தருளியிருந்த சுப்பிரமணிய சுவாமி தெய்வப்புலமை ஔவையாரை நோக்கி, "பெரியது யாது?" என வினவியதற்கு

**பெரியது கேட்கி னெரிதவழ் வேலோய்!**
**பெரிது பெரிது புவனம் பெரிது**
**புவனமோ நான்முகன் படைப்பு**
**நான்முகன் கரியமா லுந்தி வந்தோன்**
**கரிய மாலோ வலைகடற் றுயின்றோ**
**னலைகடல் குறுமுனி யங்கையி லடக்கங்**
**குறுமுனி யோகல சத்திற் பிறந்தோன்**
**கலசமோ புவியிற் சிறுமண்**
**புவியோ வரவினுக் கொருதலைப் பார**
**மரவோ வுமையவள் சிறுவிரன் மோதிர**
**முமையோ விறைவர் பாகத் தொடுக்க**
**மிறைவரோ தொண்டருள்ளத் தொடுக்கந்**
**தொண்டர்தம் பெருமையைச் சொல்லலும் பெரிதே**

என்று விடை கூறியதனால் அறியப்படும். எல்லாவற்றையும் தம்முள் அடக்கிநிற்கும் சிவபெருமானையும் தம்முள்ளடக்கி நின்ற திருத்தொண்டர்களையும் தம்மகத்தடக்கி நிற்றலால் பன்னிரு திருமுறைப் பெருமை பகர்தற்கரிது.

பன்னிரு திருமுறைகள் சிவபெருமானையும் விநாயகர் முதலிய மூர்த்திகளையும் சமயாசாரிய சுவாமிகள் சண்டேஸ்வரர் முதலிய நாயன் மார்களையும் அடக்கிநிற்றலானும், சொல்லும் பொருளும் சிவமும் சத்தியுமாமென்று கூறப்படுதலினாலும், திருமுறைகளைப் பூஜித்தவர், சிவபெருமான் விநாயகர் சமய சாரியர் முதலியோரைப் பூஜித்தவராவார். இவர்கள் எல்லோருக்குந் தனித்தனி பூசை செய்ய இயலாதவர் பன்னிரு திருமுறைகட்கும் பூசையும் விழாவும் செய்யக் கடவர். அது அவர்கட்குப் பூசை விழாக்கள் செய்ததாய் முடிதலேயன்றிக் கோடி சிவலிங்கப் பிரதிட்டை செய்ததாயும் முடியும். அநேக கோடி கற்பக காலம் போகங்களை அநுபவிக்கச் செய்து சிவசாயுச்சி யத்தையும் அவர்கட்குக் கொடுக்கும். நித்திய நைமித்தியங்கட்கு ஏட்டுப் பிரதிகள் விசேடித்தன. அவை கிடையாவிடின் சுத்தமான கடிதப் புத்தகங்களை வாங்கிப் பூசிக்கக்கடவர்.

அவ்வத் திருமுறை நாயன்மார் திருநக்ஷத்திரம் வருங்காலத்துத் திருமுறையையும் அந்நாயன் மாரையும் அலங்கரித்துத் திருவிழாச் செய்ய வேண்டும். இவ்விதம் திருமுறை கட்குப் பூசை விழாக்கள் செய்துவரின் உலகிற் றுன்பமில்லை; கன்னம், களவு முதலிய பயங்கள் நீங்கும்; நன்மையெல்லாம் விளையும்; சிவலோக த்தினிதிருந்து வாழ்வர். இது சுப்பிரமணியக் கடவுள் அகத்திய முனிவருக்கு உபதேசித்தருளிய சிவதருமோத்தரத்தான் உணரப்படும்.

நன்றி
சைவ சாஸ்திர பரிபாலனம்

**எற்றுஎன்று இரங்குவ செய்யற்க செய்வானேல்**
**மற்றுஅன்ன செய்யாமை நன்று 655**

'ஐயோ! எத்தன்மையான தவற்றை எண்ணாது செய்து விட்டேன்!' என்று பின்பு வருந்துவதற்குக் காரணமான செயல்களை ஒருபோதும் செய்யக்கூடாது. ஒருகால் தப்பித் தவறிச் செய்து விட்டால், அதன் பின்பாகிலும் அத்தகைய செயல்களை செய்யாதிருப்பது நல்லது.

# சைவ சித்தாந்த வாழ்க்கை நெறி

பவித்ரா சுப்பிரமணியஐயர்

சைவ சித்தாந்தம் பேசும் தத்துவங்களை இங்கு ஆராய்வோம். இத்தத்துவங்களே மிக முக்கியமானது கடவுள். எனவே சைவ சித்தாந்தத்தினது கடவுட் கொள்கையை முதலில் எடுத்துக் கொள்வோம். சிவன் எனும் சொல்லிலிருந்து வந்ததே சைவம். சித்தாந்தம் என்று மட்டும் குறிப்பிடாது சைவசித்தாந்தம் எனச் சிவ சம்பந்தத்தையும் சேர்த்து வழங்குவதிலிருந்தே சிவனுக்கு இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் முதன்மை நன்கு தெரிகின்றது.

சைவசித்தாந்தம் வேறெங்கும் வழங்காது தமிழ் நாட்டில் மட்டுமே மிகுதியும் வழங்குவதால் இதனை ஆதிகாலந் தொட்டுத் தமிழருக்கேயுரிய தத்துவம் எனலாம். ஆனால் இங்ஙனம் கொள்வதிலே பெரிய இடர்பாடு ஒன்றுள்ளது. சைவ சித்தாந்தம் கூறும் கொள்கைகள் தமிழருக்கே உரியவையாயின் அக் கொள்கைகள் கூறும் ஆதி நூல்கள் தமிழிலே எழுதப்பட்ட னவாதல் வேண்டும். ஆனால் சைவ சித்தாந்தக் கொள்கைகள் கூறும் முதநூல்கள் யாவும் வட மொழியிலேயே உள்ளது. இதுதான் அந்த இடர்ப்பாடு.

அநுமானத்தைக் கொண்டு கடவுளுண்டு என்பதை மூன்று விதமாக நிரூபிக்கலாம். இவற்றுள் முதலாவது உலகியலுண்மையைக் கொண்டு அதனைப் படைத்தவனும் உளன் என நிரூபிப்பது. இரண்டாவது இப்படைப்பின் நோக்கத்தை ஆராய்வதன் மூலம் படைத்தவனும் உளன் என நிரூபிப்பது. மூன்றாவது பொருள்களிலுள்ள குறைகளைக் கொண்டு குறைவில்லாத பரிபூரணமான பொருளும் உண்டென நிரூபிப்பது. இவற்றுள் மூன்றாவதை யோகமதத்தினர் கைக் கொள்கின்றனர் என்பதை யோகம் பற்றிய கட்டுரையிலே குறிப்பிட்டுள் ளோம். கான்ற் போன்ற பிரபல மேல்நாட்டுத் தத்துவ ஞானிகளாற் கைக்கொள்ளப்படுவதும் இதுவே, ஆனால் சைவசித்தாந்திகள் இதனைக் கையாளவில்லை. அவர்கள் முதலாவது காரணத்தையே அதிகமாகக் கைக்கொள்கின்றனர்.

சைவசித்தாந்தத்திலே அன்புக் கோட்பாடு, நல்வினைக் கோட்பாடு, கன்மக் கோட்பாடு, மறுபிறப்புக் கோட்பாடு, ஊழ்வினைக் கோட்பாடு போன்ற பல கோட்பாடுகள் பற்றி விரிவாக கூறப்பட்டுள்ளன. இக் கோட்பாடுகளை சைவ சித்தாந்த தத்துவம் தோன்றுவதற்கு முன்பே இலக்கியங்களில் நாம் காண முடிகிறது.

சங்க நூல்களிலே வருகின்ற "அன்புடைய நெஞ்சம் தான் கலந்தனவே" என்ற குறுந் தொகை இலக்கிய வரிகள், அன்பே சிவம் என்ற திருமூலரின் திருமந்திரத்தை நினைவூட்டு கின்றது. இவ் அன்பு நெறிதான் பின்னர் எமது உள்ளமானது அகம், (Ego) உணர்மனம், ஆழ்மனம் என்ற மூன்று கூறுகளாலானது. நான் என்ற உணர்வுக்குப் புறவுலகோடு தொடர்புபட்டுச் செயற்படுத்துவதற்கு அகமும் உணர் மனமும் உதவுகின்றன. புறவுலகம், அகவுலகம், இவை பற்றிய உள்ளுணர்வு, இங்கு கூறப்பட்ட உள்ளுணர்வால் அடையும் ஞானம் என்பன ஆழ்மனத்தினுள்ளே அடங்கிக் கிடக்கின்றன. செபம், தவம், தியானம் முதலாம் முயற்சிகளால் ஆழ்மனத்தையும் அறிந்து அதன் வாயிலாக முழுமையான உண்மையையும் உணர்ந்து வெளிப்படுத்த வல்லவர்களே ஞானிகளான இருடிகள். "சத்யம் ஏவ ஜயதே" (உண்மையே வெல்லும்) என்ற கோட்பாட்டில்

**ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க**
**சான்றோர் பழிக்கும் வினை** 656

தன்னைப் பெற்ற தாயின் பசியைக் கண்டு வருந்தும் வறியவனானாலும் (அத் தாயின் பசியைத் தவிர்ப்பதற்காகக் கூட) சான்றோர் பழிக்கும் செயல்களைச் செய்யக்கூடாது.

நிலைத்த இவர்கள் வாயிலாக இறைசித்தம் நூல் வடிவம் பெறுகின்றது. இவ்வாறு தோன்றியனவே வேதங்கள், ஆகமங்கள் மெய்கண்ட சாத்திரங்கள் என்பது சைவசித்தாந் திகளின் உறுதியான நம்பிக்கை. ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் சோதிக்க வொண்ணாத பரம் பொருளுண்மையை, அதன் வழிப்பட்டு உய்ய வேண்டிய ஆன்மாவின் இயல்புகளை, அதனை மறைத்து நிற்கும் ஆணவத்தின் போக்குகளை வெளிப்படுத்துவனவே ஆகமங்களும் சுருதிகளும்.

மேற்குறித்த அநுமானப் பிரமாணத்தின் அடிப்படையில் பிரதிக்ஞை (முரபு) ஏது (காரணம்) உவமை உபநயம் (உவமேயம்) நிகமனம் (நிறுவல்) என்ற ஐவகை உறுப்புக்களமைந்த நியாயத் தொடை வாயிலாகவும் இறையுண்மையை நிறுவுவர்.

அல்லலுறும் ஆன்மாக்களில் தளரா அன்பு இறைவனை எப்பொழுதும் ஆன்மாக்களை இருளிலிருந்து வெளிக் கொணரும் பணியில் ஈடுபடச் செய்கிறது. அவர் ஆன்மாக்களை இன்பத்திலும் போரொளியிலும் நிலவும்படி செய்தார். செய்கிறார். பிறப்பென்னும் பெரும் பிணிக்கு அவரே மருந்து. எல்லாவற்றையும் இன்புறச் செய்பவர் அவரே பிறமொழி நீந்த அறவாழி அந்தணன் தாள் சேர வேண்டும். இறைவன் அடி சேராதார் பிறவிக் கடலை நீந்தார்.

ஆன்மாக்கள் எண்ணுக்கணக்கற்றவை. அவ்வாறு கணிப்பதாயின் அவை இதுவரை பிறந்த நாள்களையும் இனிப் பிறக்கப் போகும் நாள்களையும் எண்ணிக் கணிப்பதற்குச் சமமாகும் என்பர் உமாபதி சிவாசாரியார். இவை மலபந்தத்தாலும், அத்மாயையின் ஊக்குதலாலும் வினைகளைச் செய்து அவற்றின் அனுபவிக்கப் பல பிறவிகள் எடுக்கின்றன.

சிவனை முழுமுதற் கடவுளாய்க் கொள்ளும் சைவத்தின் முடிந்த முடிவான அறிவைத் தருவது சைவசித்தாந்தம். வேதங்கள், ஆகமங்கள், திருமுறைகள், மெய்கண்ட சாத்திரங்கள் ஆகியவற்றின் முடியாகவும், சாரமாகவும் அது விளங்குகின்றது. சைவசித்தாந்தத்திற்குப் பொதுநூல்களாகக் கொள்வன வேதங்கள், எனவே அது வைதிகமானது. சிவாகமங்கள் அதற்குச் சிறப்பு நூல்கள். எனவே அது ஆகமாந்தம்.

வேத நெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க" என்பார் சேக்கிழார். வேதத்தின் வழிச் சென்று ஆகமங்களின் வழிகாட்டலிற் சைவமாகிய துறையை ஆன்மா அடையச் சைவசித்தாந்தம் அதற்கு உறுதுணையாகும்.

இறைவன் ஒருவனே துணை பொருள், உள்பொருள், ஆன்மாக்கள் அவன் தோற்றங்கள். மாயாகாரியமானவை. மாயை விலக இறைவனோடு அவன் தோற்றங்களான சீவான்மாக்கள் ஒடுங்கி ஒன்றாகின்றன. இரண்டில்லையாகி அத்துவித மாகின்றன. இவ்வாறு ஏகமாகிய ஒன்றையே வலியுறுத்தும் வாதம் ஏகான்மவாதம் சங்கர வேதாந்தம் ஏகான்ம வாதத்தை நிறுவும்.

இறைவன், ஆன்மா, ஆணவம் ஆகிய மூன்றும் உள்பொருள்கள். இவை ஒவ்வொருவருடைய வாழ்விலும் பின்னிப்பிணைந்திருக்கின்றது. அநாதியானவை. தோற்றுவிக்கப்படாதவை. இறைவனாகிய சிவபெருமான் இயல்பாகவே அறிபவர். ஆன்மாக்கள் அறிவிக்க அறிபவை. அநாதியாகவே அறியாமையை இயல்பாய் கொண்டது. ஆணவம் ஆணவத்தால் மூடுண்டு ஆன்மாக்களைத் தனது பேரருள் கொண்டு பேதித்துத் தம்மோடு பாலில் நீராய்க் கலந்திட வைப்பவர் சிவபெருமான். இந்தக் கலப்பு ஒன்றும் இரண்டுமற்ற சுத்த அத்துவிதம். எனவே சைவ சித்தாந்தம் அநேகான்மவாதம். பன்மைக் கோட்பாட்டினை முதன்மைக் கோட்பாடாகக் கொண்டது.

ஒரு கோட்பாட்டினை நிறுவுவதற்கு மூவகைப் பிரமாணங்களைச் சைவசித்தாந்தம் வேண்டி

**பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்**
**கழிநல் குரவே தலை** **657**

தீய செயல்களைச் செய்து அவற்றால் வந்த பழியைத் தம் தலைமேல் ஏற்றுக் கொண்டு பெற்ற செல்வத்தை விட, சான்றோர் வினைத் தூய்மையோடு இருந்து பெறும் கடும் வறுமையே சிறந்ததாகும்.

நிற்கும். அவை காண்டல், கருதல், நூல் என்பன இவற்றைப் பிரத்தியட்சம், அநுமானம், ஆகமம் அல்லது சுருதி என வட மொழியாளர் குறிப்பர்.

எமது கண்களுக்கு முன்பு தோன்றுபவை உள்பொருள் என்று முடிவு செய்வது காட்சி. முன்கண்ட ஒரு பொருளின் செயற்பாட்டை பிறிதொரு பொருளிலே பின்னொருகாற் காண நேரிடின் இதுவும் அது போன்றதே, ஆதலின் உண்மையானது என்று கொள்வது கருதல், புகையைக் காண்பவர் அது உள்ள இடத்திலே நெருப்பு உள்ளது எனக் கருதுவது இதற்கு எடுத்துக்காட்டு.

சமயத்தையும், தத்துவத்தையும் இணைத்து இவ்வுலக வாழ்வின் நன்மைக்கும் மறுவுலக வாழ்வு சிறக்கவும் தக்க முறையில் அமைந்தது சைவ சித்தாந்தமாகும். சைவ சித்தாந்தக் கருத்துக்கள் வேத ஆகம காலத்தில் இருந்து வழங்கி வந்தது. எனினும் சோழர் காலத்திலிருந்து நூற் சாத்திர உருவம் பெற்றது.

சைவ சித்தாந்தம் உலகத்திலுள்ள பொருட்களை மூன்று பிரிவுகளில் அடக்கியுள்ளது. இவற்றில் பிறரால் அறிவிக்காமல் தானே முற்றும் உணரும் பொருள் ஒன்று, பிறரால் அறிவித்தாலும் அறியமாட்டாத பொருளொன்று, பிறரால் அறிவிக்கப்பட்டால் அறிந்தும் அறிவிக்காத விடத்து அறியாமலும் இருக்கும் ஒன்று. அவை முறையே பதி, பசு, பாசம் என சைவ சித்தாந்தம் கூறுகிறது. இம் முப் பொருள்களையும் சைவ சித்தாந்த அடிப்படை உண்மைகளைக் கொண்டு விளக்குகிறது. இம்மூன்றும் உண்மையானவை, நித்தியமானவை, நிலையானவை, அநாதியானவை என்பதே சைவ சித்தாந்தக் கொள்கையாகும். இம் முப் பொருட்களின் இத்தன்மையை வலியுறுத்த சைவ சித்தாந்தம் பிரத்தியட்சம் (காட்சி) அனுமானம் (கருதல்) ஆப்த வாக்கியம் எனும் மூன்று பிரமாணங்களையும் கருதும்.

பதியை நோக்குவோமானால் கடவுள் இறைவன் என்றும் கூறலாம். சைவ சித்தாந்தம் கூறும் பதி, பசு, பாசம் எனும் முப்பொருளில் பதியே மேலான பொருளாகும். சைவ சித்தாந்தம் கூறும் கடவுள் எனும் தனி தமிழ் சொல்லின் பொருளிலேயே அதன் தத்துவம் நிறைந்து இருந்தது. கடவுள் பற்றிய சைவ சித்தாந்தக் கருத்துக்களை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம்.

* **கடவுள் உண்டுஎன்று கூறுவது.**
* **கடவுளிற்குரிய குணங்களையும் இயல்புகளையும் கூறுதல்.**

கடவுள் உண்டு என்று கூறும் பிரிவை மேலும் இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம்.

* **பரபக்கம்**
* **சுபக்கம்**

சுபக்கம் என்றால் கடவுள் உண்டு என்பதை காரணம் காட்டி நிறுவுவது. பரபக்கம் என்றால் கடவுள் இல்லை என்று வாதிப்போரது வாதங்களில் இருந்து பொருந்தாது என மறுப்பது.

சித்தாந்தத்திலே கடவுள் உண்டு என நிரூபிக்க அனுமானத்திற்கும், ஆப்த வாக்கியத்திற்கும் முக்கியம் அளிக்கப்படுகிறது. ஒரு பொருளின் உண்மைத் தன்மையை அனுபவத்தால் அறிந்த மகான்கள் வாயிலாகக் கேட்பது. ஆப்த வாக்கியம் சுருதிப் பிரமானம் எனப்படும்.

கடவுள் உண்டு என்று கூறும் மதத்தினர் எல்லோரும் சுருதிப் பிரமாணத்திற்கு முக்கியமளிப்பர். வேதத்தில் கூறப்பட்ட உண்மைப் பொருளை அனுமானம் மூலம் சைவ சித்தாந்தம் வலியுறுத்துகிறது.

உலகின் உண்மையை கொண்டு அதை படைத்தவன் ஒருவன் உள்ளான் என நிரூபித்தல். படைப்பின் நோக்கத்தைக் கொண்டு கடவுள் உண்டு எனக் கூறல்.

**கடிந்த கடிந்துஓரார் செய்தார்க்கு அவைதாம்**
**முடிந்தாலும் பீழை தரும்** **658**

அறநூலார் ஆகாதவை என விலக்கிய செயல்களைத் தாமும் விலக்காமல், பொருள் கருதி அவற்றைச் செய்தவர்க்கு, அச்செயல்கள் ஒரு போது நிறைவேறினாலும் அவை தூய்மையற்றதால் துன்பம் தரும்.

குறைவுடைய பொருளில் இருந்து குறைவற்ற நிறைவுடைய ஒரு பொருள் உண்டு எனக் கூறல்.

சைவ சித்தாந்திகள் கடவுள் உண்டு என்பதை உலகைக் கொண்டு மிக இலகுவாக விளக்கம் கொடுக்கின்றனர். பானையைக் கொண்டு வனைந்தவன் ஒருவன் என அறிகிறோம். பானை தன்னைத் தானே உருவாக்க முடியாது. அதே போலப் பகுதிகளை உடைய இறைவன் உலகும், தான் உருவாகி இருக்கும் என்பது பொருந்தாது. எனவே கடவுள் உண்டு என்கின்றார்.

ஆன்மாக்கள் பிறப்பதற்கும் இன்ப துன்பங்களை அனுபவிப்பதற்கும் கன்மமே காரணமாகும். அறிவற்ற கன்மம் செய்வோனைத் தானே சென்றடையாது அதனைச் சேர்ப்பதற்கு ஒருவன் வேண்டும். அவனே இறைவன் என சைவ சித்தாந்தம் கூறும். உலகம் பல பகுதிகளை உடையது. பகுதிகளை உடைய பொருள் நிறைவுடைய பொருளாக மாட்டாது. எனவே பகுதிகள் அற்ற நிறைவான பொருள் உண்டு எனச் சைவசித்தாந்தத்தில் காணப்பட்டது. இவ்வாறாகக் கடவுள் உண்டு என்பதைச் சைவ சித்தாந்தம் பல உதாரணங்களைப் பல பிரமாணங்கள் மூலம் எடுத்துக் காட்டி நிறுவுகிறது. எனவே கடவுள் நித்தியமான வியாபகமான, அறிவுடைய ஒரு பொருள் எனச் சைவ சித்தாந்தம் வலியுறுத்துகிறது.

இவ் இறைவனுக்குச் சைவ சித்தாந்தம் 2 நிலைகளைக் கூறுகிறது.

* **சொரூப நிலை**
* **தடத்த நிலை**

சொரூப நிலை என்றால், குணங்குறிகளுடன் சேராத நிலையாகும். தடத்த நிலை என்றால், குணம் குறிகளுடன் சேர்ந்த நிலையாகும். இந்நிலை இறைவன் உயிர் மீது கொண்ட இரக்கம் காரணமாக 5 தொழில்களைச் செய்வதுடன் மூவகைத் திருமேனிகளை எடுக்கின்றான். அவையாவன

அருவம் - சிவம், சக்தி, நாதம்
உருவம் - மால், மகேஸ்வரன், உருத்திரன்
அருவுருவம் - சிவலிங்கம், சதாசிவம்

இறைவன் உலகைப் படைக்கும் விதத்திற்கு சைவ சித்தாந்தம் உதாரணம் மூலம் விளக்குகிறது. குயவன் பானையை மண்ணில் இருந்து உருவாக்குகிறான். மண் பானைக்கு முதற் காரணம் திரிகை முதலில் கருவிகள். துணைக் காரணம், குயவன் நிமித்த காரணம் உலகிற்கு இம்மூன்று காரணங்களும் உண்டு. உலகிற்கு இறைவன் நிமித்த காரணம், மாயை முதற் காரணம், இவ்வாறு கூறுவதற்குக் காரணம் சைவ சித்தாந்தம் முப்பொருள்களும் உண்மை என வலியுறுத்தலாகும். மண்ணிலிருந்து பானையை வனையும் போது மண்பல மாற்றங்களுக்கு உள்ளாகிறது. எனவே தான் இறைவன் மாயை மூலம் உலகம் படைக்கிறார். எனப்பட்டது. அதனால் தான் விகாரத்திற்கு உட்படுவதில்லை. சூரியன் உதிக்கத் தாமரை மலரும். ஆனால் சூரியன் எவ்வித விகாரமும் அடைவதில்லை. அதே போலவே இறைவன் நிலையும். இறைவன் சக்தி மாயை என்பவற்றின் துணை கொண்டே உலகைப் படைக்கிறான்.ஒரு விதத்தில் இறைவனும் சக்தியும் ஒன்று. வேறொரு விதத்தில் அவை இரண்டும் வேறானவை. சித்தாந்திகள் கூறும் இறைவனும் அதன் சக்தியும் சூரியனும் அதன் ஒளிக்கதிரும் போன்றதும், சூரியன் இன்றி ஒளிக்கதிர்கள் இருக்க முடியாது. கதிர்கள் தான் சூரியன் என்றும் கூற முடியாது.

இறைவனுக்கு எண் குணங்கள் உண்டு என சைவ சித்தாந்தம் காணப்பட்டது. இறைவன் தன்னை வணங்குபவர் வணங்காதவர் என்ற வேறுபாடின்றி நன்மையே செய்வதால் அவன் சங்கரன் எனப்படுகிறான்.

"நலமிலன் நண்ணார்க்கும் சலமிலன் பேர் சங்கரன்"

**அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்**
**பிற்பயக்கும் நற்பா லவை** 659

ஒருவன் தீய செயல்களைச் செய்து பிறரை வருத்திப் பெற்ற செல்வம் எல்லாம், அவன் அங்ஙனம் வருந்துமாறு செய்து அவனை விட்டு நீங்கிப் போகும், தூய செயல்களால் வந்த பொருள்களோ, முன்பு இழக்கப்படினும் பின்பு வந்து பயன் தரும்.

இவ் இறைவன் பழத்தில் சுவை போலவும் பாலில் வெண்மை போலவும், நீக்கமற நிறைந்துள்ளது. அவன் சச்சிதானந்த சொரூபி என அழைக்கப்படுகின்றான். இவ்விதம் சைவ சித்தாந்தம் விளக்கும் பொருள்களுள் பதியே உண்மையானது எனத் தத்துவ உலகிற்கு அவற்றை அளித்துள்ளது.

ஆன்மா உண்டு, ஆன்மா எப்படிப் பட்டது? ஆன்மாவின் இலட்சியம், இலட்சியத்தை அடையும் வழி ஆன்மா உண்டு என நிறுவுவதற்கு மெய்கண்ட தேவர் ஏனைய மதத்தினர் இல்லை என வாதிடுவதே அது. உள்ளது என்பதற்குக் காரணம் என்பர். உலோகாயுதம் உலகம் மட்டும் உண்மை என்று கூறி ஏனையவை இல்லை என்று வாதிடப் பௌத்தர் சூரிய வாதம் பேசச் சைவ சித்தாந்தம் (சிவஞான போதம்) இல்லதென்றெனில் உளது. அதாவது இல்லை என்று வாதிடுவதே உள்ளது என்பதற்கு ஆதாரம். எனவே ஆன்மா உண்டு என்பதற்குச் சைவ சித்தாந்திகள் கூறும் இன்னொரு உதாரணம் அதாவது இயக்கமற்ற உடலானது அசைவுற்று இருந்தது ஆகவே இதனை இயக்க ஒரு பொருள் தேவை அதுவே ஆன்மா என்கின்றார்.

இனி இந்த ஆன்மா யார் உடம்பா? மனமா? ஐம்பொறிகளா? இந்திரியங்களா? என்ற வினாவை எழுப்பி இவற்றிற்கு மேலானது ஆன்மா எனக் கூறுகிறார். இவ் ஆன்மாவானது நித்தியமானது வியாபகரமானது. அறிவுடையதாய் உள்ள பல பொருள் என்பதாகும். ஆன்மாக்கள் பல என்பதற்குத் திருவருட் பயன் பின்வருமாறு கூறுகிறது.

"பிறந்த நாள் மேலும் பிறக்கும் நாள் போலும்
துறந்தோர் துறப்போர் தொகை"

அதாவது பிறந்த ஆன்மாவையும் பிறக்கப் போகும் ஆன்மாவையும், இறந்த ஆன்மாவையும் இறக்கப்போகும் ஆன்மாவையும் எண்ணிச் சொல்ல முடியாது. எனவே ஆன்மாக்கள் எண்ணிறைந்தவை.

ஆன்மாவின் இயல்புகளில் முக்கியமாக ஆன்மா அநாதியே ஆணவ மலத்தால் கட்டுண்டது. அதனால் பசு என்பர். ஆன்மா ஒரு போதும் தனித்து நிற்பதில்லை. எதனுடனாவது கட்டுண்டு இருக்கும். பெத்த நிலையில் தனை நீக்கி இறைவனுடன் சேர்ந்து நிற்கும்.

ஆன்மாவின் மற்ற இயல்பு எதைச் சார்கிறதோ அதன் தன்மையைப் பெறுகிறது. ஆன்மா ஆணவத்துடன் சேர அசத் ஆகவும், இறைவனுடன் சேர சத் ஆகவும் இருக்கக் கூடும். இந்த சத்தும், அசத்தும் சேர்ந்த நிலையே சதசத்து மேகத்தில் இருந்து விழும் நீர் எந்த நிலத்தில் விழுகிறதோ அந்த நிலத்தின் தன்மையையும் பெறுவது போல ஆன்மாவும் எதைச் சேர்கிறதோ அதன் தன்மையைப் பெறும்.

முத்தி எனும் இலட்சியத்தை அடைய இறைவன் எனும் துணை அவசியம். இறைவன் துணையை பெறச் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு நிலைகளில் நின்று இறைவனுக்குத் தொண்டு செய்யும் போது முறையே சாலோ, சாமீப, சாருப, சாயுச்சிய முத்தி கிடைக்கும். இத் தொண்டுகள் முறையே தாச மார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன் மார்க்கம், எனும் நெறிகளில் நின்று செயல் படுபவை. இந் நான்கு நெறிகளில் நின்று தொண்டு செய்கையில் ஆன்மாவிற்கு இருவினை ஒப்பு, மலபரிபாகம், சத்தினிபாதம், எனும் நிலைகள் ஏற்படும். தீவினையும், நல்வினையும் செய்யும் ஆன்மா இரண்டினையும் இருவினையும் ஒப்பு நோக்கித் தீவினையை விட்டு நல்வினையைச் செய்தால் இருவினை ஒப்பு எனப்படும். அதாவது இருவினை ஒப்பில் ஆன்மா விருப்பு வெறுப்பற்ற ஒரு நிலையை அடையும்.

(மிகுதி அடுத்த இதழில் தொடரும்)

**சலத்தால் பொருள்செய்துஏ மார்த்தல் பசுமண்**
**கலத்துள்நீர் பெய்துஇரீஇ யற்று** - 660

வஞ்சனையால் பொருள் ஈட்டி, அதனால் பாதுகாப்புத் தேடிக் கொள்ளுதல், ஈரம் புலராத பச்சை மண் கலத்துள் நீரை ஊற்றி இருக்கச் செய்வது போன்றது.

# இந்தச் சரீரம் ஏன் கிடைத்தது?

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

**மனிதன் விசாரிக்க வேண்டிய கேள்வி இது**

மனிதன் இந்தச் சரீரம் கிடைத்ததின் நோக்கத்தை விசாரியாது பற்றுக்களுக்கு அடிமையாய் விட்டான். வெகுதூரம் பற்றுகளுக்குப் பிறகே போய் விட்டான். அதனாலே தன் கருத்துக்களைக் கடவுளின் கருத்துக்கள் கடவுளுக்கு உடன் பாடானவைகள் என்று சொல்லவுந் தொடங்கி விட்டான்.

பற்றுக்களை அடக்க முடியாது; அவை தாமே அடங்க வேண்டும். அதற்கு ஒரே ஒரு உபாயம் பற்றுக்களைத் தர்ம வழியிலே வழிப்படுத்துவது. தருமமாவது திருவருட் குறிப்பு, அதுவேதாதிகளிற் பேசப்பட்டது.

தர்மம் மிக மிக நீளமானது. அதன் இறுதி மோட்ஷம். மோட்ஷமாவது மெய்ச்சார்பை உணர்ந்து, பொய்ச் சார்புகள் விடுபட ஒழுகுவது, தர்மம் இந்த நிலைக்கு வந்து முற்றுப் பெறுமானால் அந்த நிலைக்கு அறம் என்று பெயர்.

அறமாவது திரிகரண சுத்தி, 'மனத்துக்கண் மாசிலனாதல்' 'புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை' விலக்குதல் தர்மம், 'மேலாம் நன்னெறி ஒழுகல்' அறம். அறங்கை வந்து மனத் தூயர் ஆனவர்களுக்குப் பொருள் தெரியும். பொய்ம்மை இது, மெய்ம்மை இது என்று அறிவார்கள். உலகம் அவர்கள் உள்ளங்கைக்கு வந்து விடும். உண்மையைக் காண்பார்கள். அவர்களுடைய காட்சி 'நனவயறு காட்சி' நவை - குற்றம்.

நவையறு காட்சி கைவந்து மெய்ப் பொருள் தெரிந்தவர்கள் அப்பொருளைப் பிரிந்து வாழ இயலாதவர்களாய், அப் பொருளொடு ஒன்றுபடு கின்றார்கள். அதற்கு 'மீளா அடிமை' ஆகின்றார்கள். அதனை அனுபவிக்கின்றார்கள். அது தான் ஒப்புயர்வில்லாத இன்பம்.

இன்பந் தலைப்பட்டவர்கள் சுவர்க்காதி பயன்களைத் தருகின்ற நல்வினைகளையும், தீவினைகளோடு ஒப்ப மதித்து வெறுக்கின்றார்கள். அவர்களுக்கு 'இருவினை ஒப்பு' உதிக்கின்றது. வீடு தலைக்கூடுகின்றது. தாடலைப்படுகின்றார்கள்.

அறம் பொருள் இன்பம் வீடு, அரும்பு, மலர், காய், கனி அறத்துக்கு மூலந் தர்மம். தர்மத்துக்கு வெகு தூரத்திலுள்ளவைகள் பற்றுக்கள். பற்றுக்கள் எண்ணிறந்தவைகள் ஒவ்வொரு நரம்புத்துாய்க்கும் ஒவ்வொரு பற்றுச் சொல்லலாம்.

சூரபத்மா முதலிய அசுரர்கள் 'தர்மம் என்று ஒரு பொருள் உளது' என்பதை உணராது, பற்றுக்களின் வழியில் முழுகிக் குதிக்கின்றார்கள்.

இந்திரன் முதலிய தேவர்கள் - தஷப்பிரசாப தியை உள்ளிட்டவர்கள் அப்பாற் சென்று கொண்டு இருப்பவர்களேயாயினும், இடையிடையே தர்மத்தை விலகிப் பற்றுவழிப் பட்டுத் தவிக்கின்றார்கள்.

ஜனகாதி முனிவர்கள் சார்பு உணர்ந்து 'சார்பு கெட' ஒழுகுவதில் நிலைக்கும் பொருட்டுக் கல்லால விருஷ நிழலில் அறங் கேட்கின்றார்கள்.

பிரம விஷ்ணுக்கள் சில சமயங்களில் அறத்தை விலகிப் பொருள் தலைப்படாமல், அடி முடி தேடி மெய்ப் பொருள் காண முயலுகின்றார்கள்.

வள்ளிநாயகியார் பொருள் உணர்ந்து மெய்ப் பொருளோடு ஒன்று பட்டு ஐம்புல வேடர்களை விலகி இன்பந் தலைக்கூடுகின்றார்.

தெய்வநாயகியார் இன்பந் தலைகூடித் தாடலைப் பட்டு 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்ற நிலை முற்றுப் பெற்று, 'ஊருணி உற்றவர்க்கு ஊரன் மற்று யாவர்க்கும் ஊதியம்' என்கின்ற முடிந்த அன்புத் துறை நிறைவு ஆகி, திருவருள் வெள்ளமாய்ப் பிரவாகிக்கின்றார்.

தொடர்ச்சி 19 பக்கம்

# பக்திமைப் பாடல்களின் தோற்றமும் வளர்ச்சியும்

பேராசிரியர் க. வெள்ளைவாரணன்

"பக்திமைப் பாடலானது ஆவூர்ப் பசுபதி யீச்சரம்பாடு நாவே" என திருஞானசம்பந்தப் பிள்ளையார் தம் நாவுக்குக் கட்டளையிடுகிறார். இறைவனைக் குறித்து அன்பு மீதூர்ந்து பாடப் பெற்ற இசைப் பாடல்கள் இடையறாது பாடப் பெறும். அவ்வூரில் இறைவன் வீற்றிருக்கும் பசுபதியீச்சரம் என்னும் திருக்கோயிலை நாவே பாடிப் போற்றுவாயாக" என்பது இத் தேவாரத் தொடரின் பொருளாகும். இத் தொடரிற் "பக்திமைப்பாடல்" எனக் குறிக்கப் பெற்றவை உயிர்க்குயிராகிய இறைவன் பாற் பேரன்பினை விளக்கும் இயல்பினலாகிய இன்னிசைத் தமிழ்ப் பாடல்களாகும்.

எங்கும் நீக்கமற நிறைந்து உலகுயிர்களை இயக்கியருளும் முழுமுதற் கடவுளை வழிபட்டு இன்புறுதற்குரிய சாதனமாவன, இறைவனது பொருள் சேர் புகழ் திறங்களை விரித்துரைக்கும் தோத்திரங்களாகிய இனிய இசைப் பாடல்களேயாகும். திருக்கோயில்களில் நாள் வழிபாட்டில் இறைவனுக்குத் திருமஞ்சனமும் நறுமஞ்சனமும் திருவமுதும் நறும்புகையும் நல்விளக்கும் நான் மறைமுழக்கமும் அந்தணர் வேள்வியும் இன்றியமையாதவாறு போலவே, இறைவனது மெய்ம்மைசேர் புகழ்த்திறங்களைப் பரவிப் போற்றும் செந்தமிழ்க் கீதங்களாகிய தெய்வப் பாடல்கள் மிகவும் இன்றியமையா தனவாகும். இத்திருப்பாடல்கள் திருக்கோயில்களில் இறைவனைப் பேரன்பினால் வழிபட்டு நலம் பெறக் கருதிவரும் பல்லாயிரம் மக்களது உள்ளத்தை நெகிழ்வித்து அன்னோருள்ளத்தில் அருவனாகிய இறைவன் கோயில் கொண்டு விளங்கும் வண்ணம் பேரன்பாகிய பக்தியை விளைவிக்கும் ஆற்றல் வாய்ந்தன. ஆதலின் அண்ணலாகிய இறைவனைப் போற்றிய இசைத்தமிழ்ப் பாடல்களாகிய இவற்றைப் "பக்திமைப் பாடல்" என வழங்கினர், முன்னைத் தமிழ்ச் சான்றோர். இறைவனை நெஞ்சம் நெக்குருகி வழிபடுவதற்கு நிலைக்களமாய மைந்த திருக்கோயில்களின் கண்ணே இன்றியமையாது இடம் பெறத்தக்க வழிபாட்டு முறைகளில் நெஞ்சம் நெகிழ்ந்துருகப் பாடுதலாகிய இத்திருத்தொண்டு மிகவும் சிறப்புடையதாகக் கொள்ளப் பெற்றது.

பண்ணார்ந்த பாடல்களால் இறைவனைப் பாடிப் போற்றுதலாகிய திருப்பணி யாவராலும் விரும்பி மேற்கொள்ளத்தக்க எளிமையும் இனிமையும் ஒருங்குடையதென்பதும் இவ்வினிய எளிய சாதனத்தை மேற்கொள்ள மனமில்லாதவர் இதனின் மிக்க மற்றைத் தொண்டுகளை மேற்கொண்டு பக்தி செய்ய இயலாதென்பதும் அனுபவமுடைய சான்றோர்களின் துணிபாகும்.

'பத்தனாய்ப் பாடமாட்டேன்
பரமனே பரமயோகி
எத்தனாய்ப் பக்தி செய்கேன்
என்னைநீ யிகழவேண்டா'

எனத் திருநாவுக்கரசர் தில்லைச் சிற்றம்பலவனை இறைஞ்சிக் கூறும் இவ்வேண்டுகோள் இறைவன் பாற் பக்தி செய்தற்கு இன்றியமையாத எளிய சாதனம் பாடும் பணியே என்ற இவ்வுண்மையினை நன்கு வலியுறுத்தல் காணலாம்.

திருக்கோயிலில் திருவலகிடுதல், மெழுகுதல், நறுமலர்மாலை தொடுத்தல் என்ற இச் சரியைத் தொண்டுகள் ஒன்றிற்கு ஒன்று பத்துமடங்கு மேற்பட்ட நற்பயன்களைத் தருவன. திருக்கோயிலில் திருவிளக்கிடுவோர் உண்மை நெறியாகிய சிவஞானத்தைப் பெறுவர். இறைவனது மெய்ப்புகழை விரித்துரைக்கும் இன்னிசைப் பாடலாகிய கீதத்தை மிகப்பாடும் அடியார்களுக்கு இறைவன் அருளுகின்றான். மேற்குறித்த தொண்டுகளால் விளையும் நற்பயன்களைக் காட்டிலும் அளவற்றனவாகும். இத்தகைய திருத்தொண்டின் பயன்களைப் பகுத்துணர்த்தும் முறையில் அமைந்தது.

**'விளக்கினார் பெற்ற இன்பம்**
**மெழுக்கினாற் பதிற்றியாகும்**
**துளக்கில்நன் மலர்தொடுத்தால்**
**தூயவிண்ணேற லாகும்**
**விளக்கிட்டார் பேறு சொல்லின்**
**மெய்ந்நெறி ஞானமாகும்**
**அளப்பில கீதஞ் சொன்னார்க்**
**கடிகள்தாம் அருளுமாறே'**

என வரும் நேரிசையாகும், இதன் ஈற்றடியிவை.

'கீதஞ் சொன்னார்க்கு அடிகள் தாம் அருளுமாறு அளப்பிள' என இணைத்துப் பொருள் கொள்க. இனி, இத்திருப்பாடலில் திருவலகிடுதல் முதலிய பணிகளைச் செய்தார் பெறும் பேறு இவ்வளவு, இவ்வளவு என உணர்த்திய அப்பரடிகள் புகத்திறத்தால் அளவில்லாதனவாகிய இசைப் பாடல்களால் இறைவனைப் போற்றினார்க்கு அவற்றினதும் மேலாகத் தருவதற்குரிய பொருள் பிறிதொன்றின்மையின் இறைவன் பக்திமைப் பாடல்களால் தன்னைப் பாடிப் போற்றுவோர்க்குத் தன்னைத்தானே பரிசிற் பொருளாக வழங்கியருள்வான் என்பார், 'அளப்பில கீதஞ் சொன்னார்க்கு அருளுமாறு (கைம்மாறாக நல்கத்தக்க பொருள்) அடிகள் தாம் (இறைவனே) என்றார் எனக் கொள்ளுதற்கும் இடமுண்டு. இத்திருப்பாடல் இறைவனை அன்பினால் வழிபடுதற்குச் சாதனமாக விளங்குவன இசைப் பாடல்களேயென்ற உண்மையினை நன்கு வலியுறுத்தல் காண்க.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், நம்பியாரூரர் முதலிய அருளாசிரியர்கள் காலத்தில் தமிழ் நாட்டுத் திருக்கோயில்களில் இறைவனது பெருங்கருணைத் திறத்தை வியந்து போற்றும் பக்திமைப் பாடலாகிய இசைத்தமிழ்ப் பாடல்கள் சிறப்பிடம் பெற்றிருந்தன. இச் செய்தி "செந்தமிழோர்கள் பரவியேத்துஞ் சீர்கொள்செங் காட்டங்குடியதனிற் கந்தம் அகிற் புகையே கமழும் கணபதியீச்சரம்" எனவும்.

"பண்ணியல் பாடலறாத அவ்வூர்ப் பசுபதியீச்சரம்" பக்திமைப் பாடலறாத அவ்வூர்ப் பசுபதியீச்சரம் எனவும் வரும் தமிழ் ஞானசம்பந்தர் வாய் மொழிகளால் நன்கு புலனாகும்.

பத்தராய்ப் பணியும் மெய்யன்பினராகிய அடியார்கள் பரமனையே பாடும் இசைத்தமிழ்ச் செல்வர்களாய்த் திருக்கோயில்களில் தங்கியிருந்து உமையொரு பாகனாகிய சிவபெருமானை இன்னிசைப் பாடல்களாற் பரவிப் போற்றியும் அச் செழும் பாடல்களின் பொருள் நலங்களில் உள்ளம் ஈடுபட்டுத் திளைத்தும், தம்மையொத்த பேரன்புடைய அடியார்களுடன் இறைவனது திருவருட் பெருமையினை யெடுத்துரைத்து அன்பினால் அளவளாவியும் நெஞ்சம் நெக்குருகிக் கண்ணீர் ததும்பி முழுமுதற் கடவுளை இடைவிடாது தியானித்தும் வழிபட்டு மகிழ்ந்தார்கள். இச்செய்தி.

**'கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப்**
**பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்'**
**'பண்ணொன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக**
**மண்ணின்றி விண்கொடுக்கும்**
**மணிகண்டன் மருவுமிடம்**
**பாடுவாரிசை பல்பொருட் பயனுகர்ந் தன்பால்**
**கூடுவார் துணைக் கொண்ட தம் பற்றறப் பற்றித்**
**தேடுவார் போருளைனவன் செறிபொழில் தேவூர்**
**ஆடுவானடி யடைந்தனம் அல்லலொன்றிலமே'**
**'கலவ மாமயிலாளொர் பங்கனைக்கண்டு**
**கண்மிசை நீர்நெகித்திசை குலவுமாறு வல்லார்**
**குடிகொண்ட கோட்டாற்றில்'**

என வரும் திருப்பதிகத் தொடர்களால் இனிது விளங்கும், தமிழ் நாட்டில் இசைத்திறத்தில்வல்ல ஆடவரும் மகளிரும் நாட்காலையே துயிலெழுந்து நீராடித் தூயசிந்தையுடன் திருக்கோயிலையடைந்து இறைவனது அருளியல்பினை நினைந்து ஆரா அன்பினால் நெஞ்சம் நெக்குருகிக் கண்ணீர் மல்கி இனிய இசைப் பாடல்களைப் பாடியும் யாழ் வீணை முழவு மொந்தை முதலிய இசைக்கருவிகளை வாசித்தும் இசைப் பாடல்களின் சுவை நலன்கள் புலப்படும் வண்ணம் ஆடியும் தெய்வ வழிபாட்டில் மகிழ்ந்திருந்தார்கள்.

**'துன்னிய மாதரும் மைந்தர் தாமுஞ்சு**
**னையிடைமூழ்கித் துதைந்த சிந்தைப்**
**பன்னிய பாடலறாத ஆவர்ப்பசுபதியீச்சரம்'**
**'புண்ணிய வாணரும் மாதவரும்**
**புகுந்துடனேத்தப்பு ணையிழையார்**
**அண்ணலின் பாடலெடுக்குங்**

கூடலாலவாய்' 'அஞ்சுட ரொடாறுபத
மேழினிசையெண்ணரிய வண்ணமுளவாய்
மஞ்சரொடு மாதர் பலருந் தொழுது சேரும்
வயல்வை காவலே' 'இசைவரவிட்டியல்
கேட்டுக் கல்லவடமிட்டுத் திசைதொழுதாடியும்
பாடுவார் சிந்தையுட் சேர்வரே'
'பண்ணிய நடத்தொடிசை பாடுமடியார்கள்
நண்ணிய மனத்தின்வழி பாடுசெய்நள்ளாறே'

என வரும் திருப்பதிகத் தொடர்கள், பண்டைநாளில் இசைத்திறத்தில் வல்ல ஆண்களும் பெண்களும் திருக்கோயில்களிற் சென்று இறைவனது பெருள் சேர்புகழைப் பண்ணார்ந்த பாடல்களாற் பாடி வழிபாடு செய்த முறையினை நன்கு புலப்படுத்துவனவாகும்.

தமிழேயன்றிப் பிறமொழிகளைத் தாய் மொழியாகப் பெற்று வேறு திசையில் வாழும் ஆடவரும் மகளிரும் தமிழகத்திலுள்ள திருக்கோயில்களை வழிபட்டு இங்கு பாடப் பெறும் இசைத்தமிழ்த் திறங்களை நன்குணர்ந்து பாடும் பயிற்சியைப் பெற்றனர். பொழுது புலர்வதன் முன் துயிலெழுந்து நீரில் மூழ்கித் திருக்கோயிலில் வழிபடவரும் மாந்தரது மனவிருள் நீங்கும் வண்ணம் தாம் பயின்ற இசைத் பாடல்களையும் தாம் முன்னரே கற்றுணர்ந்த வடமொழித் தோத்திரங்களையும் ஏனைத் திசைமொழிகளிலமைந்த இசைப் பாடல்களையும் வீணை முதலிய நரம்புக் கருவிகளில் வைத்து வாசித்து மகிழ்ந்தார்கள் இச்செய்தி.

'ஊறு பொருளின்ற மிழியற்
கிளவிதேருமட மாதருடனார்
வேறுதிசை யாடவர்கள்கூறு
இசைதேருமெழில் வேதவனமே'

எனவும்,

'தென்சொல்லிஞ்சமர்
வடசொல் திசைமொழி யெழில்நரம்பெடுத்துத்
துஞ்ச நெஞ்சிருள் நீங்கத்
தொழுதெழு தொல் புகலூரில்'

என வரும் ஆளுடைய பிள்ளையார் தேவாரத் தொடர்களால் இனிது புலனாகும்.

இசைத்திறத்தில் நன்கு தேர்ந்தவர்களேயன்றி இசைத் துறையில் போதிய பயிற்சியும் குரல்வளமும் பொருளுணர்ந்து பாடும் மொழிப்பயிற்சியும் உடல் வண்மையும் நன்கு வாய்க்கப் பெறாத முதியவர்களும் இறைவன்பாற் கொண்ட பேரன்பாகிய பக்தியினால் தம்மால் இயன்ற அளவு பக்திமைப் பாடலாகிய இசைப் பாடல்களைப் பாடி, இறைவனை வழிபட்டு மகிழ்ந்தார்கள்.

கடைச்சங்க காலத்தில் திருவாவினன்குடி முதலிய முருகன் திருக்கோயில்களில் பக்திமைப் பாடலாகிய தெய்வப் பாடல்களை இசையுடன் பாடுவோரும் யாழில் இசைப்போரும் ஆகிய இசைப் பாணர்கள் அழுக்கேறாத தூயவுடையும் நோயின்றித் தூய்மை வாய்ந்த உடல் வனப்பும் மாசற்ற தூய நன்னெஞ்சமும் உடையராய் விளங்கினர் என்பதனை,

'புகைமுகந்தன்ன மாசில் தூ வுடை
முகைவா யவிழ்ந்த தகைசூ ழாகத்துச்
செவிநேர்புவைத்த செய்வுறு திவலின்
நல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சில்
மென் மொழி மேவலர் இன்னாம் புளர
நோயின் றியன்ற யாக்கையர் அவிர்தொறும்
பொன்னுரை கருக்குந் திதலையர் இன்னகைப்
பருமந்தாங்கிய பணிந்தேந் தல்குல்
மாசில் மகளிரொடு மறுவின்றி விளங்க'
(திருமுருகு. 138-147)

என வரும் தொடர்களால் நக்கீரனார் விரித்துக் கூறியுள்ளார். கடைச்சங்க காலத்து நிலவிய இம்முறை, தேவார ஆசிரியர் காலத்தும் தமிழகத் திருக்கோயில்களில் தொடர்ந்து நிலைபெற்று வந்துள்ளது. தமிழ் நாட்டிலுள்ள திருக் கோயில்களில் இறைவனைப் போற்றி பக்திமைப் பாடல்கள் பாடும் மகளிர், இனிய இசை மொழியும் உடல் வனப்புத் தூய்மையும் நற்குணங்க ளெல்லாவற்றுக்கும் நிலைக்களனாகிய மனத் தூய்மையும் ஒழுங்குடையராய், எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளது திருவருள் வண்ணங்களும் வரம்பிலாற்றலும் நலம்வளர் ஞானவுரை களுமாகிய பெருஞ் சீர்த்திகளைப் பொருளாகக் கொண்ட இன்னிசைச் செழும் பாடல்களை இறைவன் திருமுன்னர்ப் பாடிப் போற்றினார்கள்.

**'பண்ணினல்ல மொழியார்**
**பவளத்துவர் வாயினார்**
**எண்ணினல்ல குணத்தார்**
**இணைவேல் வென்ற கண்ணினார்**

**வண்ணம் பாடி வலிபாடித் தம் வாய் மொழி பாடவே**
**அண்ணல் கேட்டிருந்தாலும்**
**ஐயாறுடை யையனே'**

என வரும் திருப்பாடலில் ஆளுடைய பிள்ளைார் அழகுறக்குறித்துப் போற்றியுள்ளார். இனி இத்தகைய பக்திமைப் பாடல்கள் தமிழகத்தில் தோன்றி வளர்ந்த வரலாற்றை ஒரு சிறிது நோக்குதல் இன்றியமையாததாகும்.

இயற்கை வனப்பும் தெய்வ வனப்புமாகிய இருவகை வனப்புகளே இசைப் பாடலுக்குரிய சிறப்புடைப் பொருள்களெனத் தமிழ் முன்னோர் கருதினர். இக் கருத்தினாலேயே இசைப் பாடல்கள் யாவும் முதற்றுளும் கருப்பொருளு மாகிய உலகியற் பொருள்களின் இயற்கையழகினையும் இவற்றின் உடனாய் விளங்குந் தெய்வ அழகினையும் பொருளாகக் கொண்டு பாடப் பெறுவனவாயின. இசையில் வல்ல பாணர் முதலிய கலைச் செல்வர்கள் தம் இசைத் திறத்தை அவையின் கண் புலப்படுத்தும் பொழுதெல்லாம் சிறப்புடைப் பொருளாய்த் திகழும் முழுமுதலறி கடவுளைப் போற்றும் தெய்வப் பாடல்களைப் பாடுதலையே தமது இசை மரபாகக் கொண்டிருந்தனர். இங்ஙனம் பண்டை நாளில் வாழ்ந்த பாணர் தமது இசைத் திறத்தினைப் புலப்படுத்தும் இடங்களிலெல்லாம் தெய்வ விசைப் பாடலாகிய பக்திமைப் பாடலையே முதற் கண் பாடுவது என்பதனைத் தமது தலையாய கடமையாகக் கொண்டிருந்தனர்.

# சந்தேகம் தெளிதல்

**விளக்கமளிப்பவர் வாரணன்**

கேள்வி : க.குமாரசிவம், கொழும்பு.
சிவபுராணம் படிக்கும் பொழுது முதலில் தொல்லை இரும் பிறவி" என்று தொடங்கும் பாடலைப் பலர் படிக்கிறார்கள். இப்பாடலை எழுதியவர் யார்? இதனைப் படிப்பது தேவையா?

பதில் : "தொல்லை இரும் பிறவி" என்று தொடங்கும் பாடல் திருவாசகத்தின் சிறப்பையும் அதனைப் படிப்பதால் வரும் பயனையும் கூறுகிறது. இது திருவாசக நூற் சிறப்புப் பாவாக பலராலும் கொள்ளப்படுகிறது. இதனைப் பிற்காலத்துப் பெரியார் எவரோ பாடியுள்ளார். அவரின் பெயர் தெரியவில்லை.

திருவாசகத்தின் சிறப்பை உணர்த்தும் சிறந்த பாடல் என்பதால், திருவாசக முற்றோதல் நிகழ்ச்சிகளிலும் பேச்சுக்களிலும் இதனைப் படிப்பது பொருத்தமாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும். ஆனால் சிவபுராணத்தை ஓதும் போது இதனை முதலில் ஓதுவது பொருத்தமற்றதும் பயனற்றதுமாகும். "நமச்சிவாய" என்ற மங்கலத் தொடருடன் தொடங்கும் சிவபுராணத்தை ஓதத் தொடங்குமுன் இப் பாடலைப் படிப்பதைத் தவிர்ப்பது நல்லது. இது போன்றே வழிபாட்டில் திருவாசகப் பாடலை ஓதும் போதும் இதனைத் தவிர்ப்பது வேண்டற்பாலது.

சந்தேகம் தெளிதல் : பிழைத்திருத்தம்

ஆனி இதழ் - 1ஆம் கேள்விக்கு அளித்துள்ள பதிலில் இறுதியில் "இந்து தலங்கள் எல்லை கடந்த இயல்பு" என்பது தவறுதலாக இடம் பெற்றுள்ளது அதை நீக்கி "இரு துருவங்களின் எல்லை கடந்த இயல்பு இது" என்று சேர்த்துக் கொள்ளவும்.

# வேதாந்தத் தெளிவே சைவ சித்தாந்தம்

செல்வி. தே. கதம்ஜா

வேதாந்தத் தெழிவாம் சைவசித்தாந்தம் என்பதற்கிணங்க வேதாந்தத்தை எடுத்து நோக்குவோமானால் வேதாந்தம் என்பது முடிந்தமுடிவு எனப் பொருள்படும். இதனை சங்கரர், இராமானியர், மத்துவர் ஆகியமூவரும் முன்வைத்துள்ளார்கள். சங்கரருக்கு முன்னதாக பாதராயனர் வேதாந்தத் தத்துவத்தை வெளியிட்டாராயினும் இவரால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் தெளிவிற்குப் பதிலாக தெளிவின்மையையும் விளக்கத்திற்குப் பதிலாக குழப்பத்தையும் கொடுத்தமையால் அது குறிப்பிடத்தக்க ஒரு வேதாந்தமாகக் காணப்படவில்லை. எனவே அதனை நிவர்த்தி செய்ய வேண்டும் என்ற நோக்கோடு 8ஆம் நூற்றாண்டில் சங்கரர் அத்துவைத கோட்பாட்டை முன்வைத்தார். இது பொருத்தமற்றது என்றுகருதி 11ஆம் நூற்றாண்டில் இராமானியர் விஸ்தாத்து வைதத்தை முன்வைத்தார். அதன் பின்னர் 18ஆம் நூற்றாண்டில் மத்துவர் துவைதம் என்ற கோட்பாட்டை உலகிற்கு முன்வைத்தார். இவ்வாறு இந்த வேதாந்திகளால் முன்வைக்கப்பட்ட வேதாந்தக் கருத்துக்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடு கொண்டவையாகவே காணப்பட்டுள்ளது.

சங்கரர் அத்துவைதம் என்னும் வேதாந்தத்தினூடாகப் பிரமம் மட்டுமே உண்மைப் பொருள் என்று ஏகான்மவாதத்தில் முன்வைத்துள்ளார். அதாவது இல்லாத ஒன்றை இருப்பதாகக் கூறி, பிரமம் தானாகவும், ஒன்றாகவும் இருப்பதே மெய் வேறாகவும் பல வாகவும் இருப்பது பொய் என்று அவரது வாதத்தில் கூறியுள்ளார். சங்கரருக்குரிய சில வேதாந்திகள் தங்களுக்குரிய வேதாந்தக் கருத்தை முன்வைக்கும் பொழுது இறைவன் உலகை ஆக்கி இருக்கின்றான் என்ற கருத்தை முன்வைக்க சங்கரர் அதை மறுத்துத் தனது கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

அடுத்து விசுத்துவைதம் என்னும் வாதத்தினூடாக இராமானியர் கூறுகின்றார், உயிர், உலகு, இறைவன் ஆகிய மூன்றும் மெய்யானவை, தனியானவை ஒருபோதும் இவை ஒன்றாக முடியாது எனக் கூறுகின்றார் இவ்வாதத்தின் ஊடாக இவர் வித்திட்ட ஒவ்வொருகருத்துகளும் "சுவை நிலைப்பதற்கு பழம் இன்றியமையாதது" போல உயிரும், உலகமும் நிலைப்பதற்கு இறைவன் இன்றியமையாதது என விளக்குகின்றார். வேதாந்தத்தை அறிவதே சைவசித்தாந்தம் என்பதற்கிணங்க இராமானியரின் வேதாந்தம் சைவசித்தாந்த தத்துவங்களோடு நெருங்கிய தொடர்பு உள்ளதாக காணப்படுகின்றது. இவர் ஆன்மா பற்றிக் குறிப்பிடுகையில் ஆன்மாக்கள் நிலையானவை, ஒன்றுக்கு மேற்பட்டது என்பதோடு இச்சை ஞானம், விருப்பு, வெறுப்பு என்பன ஆன்மாக்களின் கருத்து என்கின்றார். ஞான உடைமை என்கின்ற அம்சமும் ஆன்மாக்கள் இடத்திலே காணப்படுகின்றது. ஆனால் இறைவனின் ஞான உடைமை மலங்களினால் பாதிப்படையாது இராமானியரின் முத்தியின்படி முத்தி என்பது ஸ்ரீராஜன் வீற்றிருக்கும் வைகுண்டத்தை அடைவதாகும். வைகுண்டம் அடைவதற்கு கன்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் ஆகிய மூன்றும் உரியனவாகும். ஆனால் இவற்றுள் பக்தி யோகமே சிறந்தது. இது இலகுவாகக் கைவரப் பெற்ற மார்க்கமாகவும் மோட்ஷத்துக்குரிய சிறந்த சாதனமாகவும் கொள்ளப்படுகின்றது. பக்தி செலுத்தும்போது இறைவனை அன்போடு தொடர்ச்சியாகச் செலுத்த வேண்டும், இவ்வாறு தனிமனித முயற்சியோடு இடைவிடாது தொடர்ச்சியாக பக்தி செலுத்தினால் மோட்ஷம் அடையலாம் என்பது இராமனியரின் கருத்தாகும். இவ்வாறு 11ஆம் நூற்றாண்டில் இராமானியர் விசுத்தாத்து வைதத்தின் ஊடாக வித்திட்ட ஒவ்வொரு கருத்துக்களும் உயிரும், உலகமும் நிலைப்பதற்கு இறைவன் இன்றியமையாதது எனக் கூறுகின்றார்.

இதில் இருந்து பார்க்கும் பொழுது 11ஆம் நூற்றாண்டிலே வேதாந்தத்தை அறிவதே சைவசித்தாந்தம் என்பதை அறியக் கூடியதாக இருக்கின்றது. இதுமட்டுமல்லாமல் இராமானியருக்குப் பின்பு வாழ்ந்த மத்துவர்கூட 13ஆம் நூற்றாண்டில் அவருடைய துவைத வேதாந்தத்தை இயற்றியுள்ளார். இவ் வேதாந்தத்தில் மத்துவர்

வாழ்க்கைக்குத் தேவையான சமயத்துவக் கருத்துக்களையும் பொதித்து சாதனை படைத்துள்ளார். இதிலிருந்து பார்க்கும் பொழுது 11ஆம், 13ஆம் நூற்றாண்டிலே சைவசித்தாந்தம் ஓரளவு வளர்ச்சியடைந்துள்ளது என்று உணரக் கூடியதாக இருக்கின்றது. இந்தவகையில் தான் 14ஆம் நூற்றாண்டில் சைவசித்தாந்தம் உருப் பெற்றிருக்கின்றது.

சைவ சித்தாந்தம் என்பது சைவசித்தாந்தத்தவரின் முடிந்த முடிவு எனப் பொருட்படும், சைவம், சித்தாந்தம் என்னும் இருவேறுபட்ட சொற்களைக் கொண்ட இத்தத்துவத்திலே சைவம் என்பது சிவத்தன்மை பொருந்தியது. இதனால் சித்தாந்தம் எனப்படுகின்றது. சைவசமயத்துக்கு உரியவை ஆகையால் சைவசித்தாந்தம் என்ற பெயரைப் பெறுகின்றது. இக்கருத்துக்கள் யாவும் 14ஆம் நூற்றாண்டிலே பிரசித்தி பெற்றிருந்தாலும் இதற்கு முற்பட்ட காலத்திலும், அதாவது வேதகாலப் பகுதியிலும் சைவசித்தாந்தத்திற்குரிய அடிப்படைக் கருத்துக்கள் ஆங்காங்கே நிலவி வந்திருக்கின்றது, சித்தாந்தம் என்ற சொல்லை முதலில் குறிப்பிட்டவர் திருமூலராவார். மிக மிக இலகுவான தத்துவமாக இது காணப்பட்டிருக்கின்றது. இதனைத்தான் உமாபதிச் சிவாச்சாரியார் கூறுகின்றார் 'வேதாந்தத் தெழிவாம்' சைவசித்தாந்தம் என்று

இதில் இருந்து நாம் பார்க்கும் பொழுது வேதாந்தத்தை அறிவதற்குச் சைவசித்தாந்தம் ஓர் ஊன்று கோலாக அமைந்துள்ளது என்பதனை உணரக் கூடியதாக இருக்கின்றது. இப்படிப்பட்ட சைவசித்தாந்தம் சங்ககாலம் சங்கமருவியகாலம், பல்லவர்காலம், சோழர்காலம் என்பவற்றிலும் சைவசித்தாந்தக் கருத்துக்கள் மேலோங்கிக் காணப்பட்டிருக்கின்றது. அதாவது சங்க காலத்தில் எட்டுத் தொகை பத்துப் பாட்டு நூல்களும் சங்கமருவிய காலத்தில் சிலப்பதிகாரம், திருக்குறள் முதலிய அறஇலக்கியங்களும், பல்லவர் காலத்தில் பன்னிரு திருமுறைகளில் தொகுக்கப்பட்டிருக்கும் தோத்திர நூல்களும் சோழர்காலத்தில் காப்பியங்களும் எழுந்துள்ளன. இவற்றை நோக்குமிடத்து சைவசித்தாந்த தத்துவங்கள் நிலவி இருக்கின்றது என்பதைக் கண்டுகொள்ள முடிகின்றது.

இவற்றில் இருந்து பார்க்கும் பொழுது வேதாந்தத்தை அறிவதற்குச் சைவ சித்தாந்தத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். இதில் இருந்து பார்க்கும் பொழுது வேதாந்தத்தை அறிவதே சைவ சித்தாந்தம் என்பதனை எவராலும், மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

---

13 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி

சிவம் இருந்தபடி இருக்கச் சிவசக்தியின் சந்நிதியில் ஆத்மாக்கள் பற்றுக்கள் தொடக்கம் வீடு இறுதியான நிலைகளிற் சஞ்சாரஞ் செய்கின்றன.

இவ்வாற்றால், சூரபத்மா முதல் தெய்வ நாயகியார் இறுதியான பாத்திரங்களையும், இன்னும் எத்தனையோ எண்ணிறந்த பாத்திரங்களையுந் தன் பாற் கொண்ட கந்தபுராணம் என்கின்ற தேவகங்கை ஆத்மாக்களின் செல்கதியைப் பேசுவதாய், அவைகளை அவ்வக் கதிகளிற் செலுத்துவதாய் ஒப்பு உயர்வு இன்றி விளங்குகின்றன.

அத்தனை பெருமையிற் சிறந்த கந்தபுராணம், இப்பூவுலகத்திலே நாவலந் தீவிலே பாரத வருஷத்திலே பரத கண்டம் என வழங்குகின்ற குமரி கண்டத்திலே மிக்குப் பயின்று வழங்கியதொரு ஷேத்திரம் உண்டு என்றால், அந்தப் புண்ணிய ஷேத்திரம் இந்த யாழ்ப்பாணமே.

ஒரு காலத்திலே இந்த யாழ்ப்பாணத்திலுள்ள ஆடவர்கள், மகளிர்கள், முதியவர்கள், இளையவர்கள் ஆகிய எல்லாருடைய இரத்தத்திலுங் கலந்து, நரம்புத்துய்கள் தோறும் ஊறிச் சுரந்து கொண்டிருந்தது கந்தபுராணம்.

இதனாலே யாழ்ப்பாணத்திலே அந்நிய கலாச்சாரங்கள் - மிலேச்ச கலாசாரங்கள் - ஊறிறுத்தல் ஆற்றாது, தாமரையிலையில் நீர் போல் உருண்டு புரண்டு சாக்கடையில் ஓடுவன ஆயின.

ஆனால் இப்பொழுது கல்வி முதலிய பல்வேறு துறைகளில் யாழ்ப்பாணம் போகிற போக்கைத் தலை குனிந்து பார்த்தால், இனி

**'மையார் களத்தார் வரம் பெற்ற சூரனுக்குச் செய்யாத ஏவல்எலாம்' செய்தோம் நெறிநீதி எய்யாத மானம் இவையெல்லாந் தானிழந் தோம்**
**ஐயா மிகவும் அலுத்தோம் அலுத்தோமே.'**

என்ற பாடலை முகாரி இராகத்திற் பாடி சுரம் பண்ணிக் கொண்டிருக்கத்தான் நேரும் போலும்.

# திருத்தொண்டின் நெறி வாழ

பண்டிதர் இ. நமசிவாயம்

சென்ற இதழின் தொடர்ச்சி

**'தெரிவரும்பெரு மைத்திருத் தொண்டர்தம்**
**பொருவ ரும்சீர் புகலலுற்றேன்முற்றப்**
**பெருகு தெண்கட லூற்றுண் பெருநகை**
**ஒளி ருக ணங்களை யொகுந்தகைமையேன்'**

என்றும் கூறுவதும் ஔவையார் இறைவனோ, தொண்டருள்ளத் தொடுக்கம், தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்று கூறுவதும் இவ்விடத்துக் காட்டத் தக்கன. சூரியனது சூட்டைக் காட்டிலும் அதனாற் சூடு பெற்ற மணலின் சூடு மிக்கிருத்தல் காட்டி இறைவன் அருளிலும் அவர் அருள் பெற்ற அடியவரருள் மிக்கதென்று விளக்கலும் இங்குக் கருதத் தக்கது. தொண்டர்களாகிய பெரியாரின் புராண மாகிய திருத்தொண்டர் புராணம், பெரிய புராணம் என்று வழங்குவதும் இக் கருத்தினாலாம் என்று கருதலாம்.

இனி, **'சீவர்களைச் சாக்ஷியாகக் குறியாமல், தமது திருவடியே சாக்ஷியாகக் குறித்துப் புண்ணியம் இயற்றும் பெருந்தன்மை உடையோருக்கு, சிவனே வெளிப்பட்டு வந்து, உலக மெங்கும் அவர் புகழை விளக்கி, யாவரும் அவரை வணங்கும்படி இடையறாத பேரின் பத்தைக் கொடுத்தருள்வார்'** என

**உன்னுகின்றனை உனைமனோர் பெரியனென்**
**றுணருமா செய உன்பால்**
**மன்னு மீசனே பந்தம் வீடளிப்பவன்**
**மற்றையர் அறிந் தென்னாம்**
**அன்னவன் திருப் பொன்னடி கரியதா**
**அருந்தவம் செய் நெஞ்சே**
**பின்னை முன்னவன் உலகறிந்திறைஞ்சுமா**
**பெருமை செய் குவனோ ரே'** என்ற செய்யுளாற் கூறுவர்.

திருநீலகண்ட நாயனாரும் மனைவி யாரும் தங்களுக்குள் நிகழ்ந்த சபதம் தங்கள் இருவருக்கு மாத்திரமன்றி அயலவருக்கு வெளிப் படாதிருக்க, அதனை வழுவாது காத்தமை யாலும், மனைவியைக் கைப்பிடித்துச் சத்தியம் செய்து தரும்படி சிவயோகியார் நெருக்கிய போதும் நாயனார் தமது செயற்கருஞ் செயலை வெளிப்படுத்தாமையாலும், மிக நெருங்கியபோது, தாம் அதனை வெளிப்படுத்தா தொழியில், அச் சிவயோகியரது சந்தேகம் தீராது என்பது பற்றியே வெளிப்படுத்தினமையாலும், சிவன் அவர்களது செயற்கருஞ் செய்கையை உலக மெங்கும் அறியும்படி வெளிப்படுத்தி, "வென்ற வைம்புலனால் மிக்கீர்" என்றவர்களைப் புகழ்ந்து அவர்களுக்குப் பேரின்பத்தைக் கொடுத்தமை யாலும், சதக நூலுடையார் கூற்றினுண்மை தெரியப் படுகிறது. இங்ஙனமே ஏனைய திருத்தொண்டர்களின் புராணங்களும் இவ்வுண் மையை வெளிப்படுத்துதல் காணலாம்.

எத்தகையோரும் எத்தொழிலைச் செய்வோரும் இடையறாது இறைவனை மனத்தால் நினைத்து வாயால் துதித்துத் தந் தொழிலால் வரும் ஊதியங் கொண்டு இயன்றவரை சிவப்பணி செய்து வருவார்களானால் பெருமை செய்யப்பட்டு இறைவன் பாத நிழலை அடைவர் என்பதற்குத் திருத்தொண்டர் புராணம் சான்று பகரும். நேச நாயனார் என்பவர் அறுவையர் குலத்து வந்தவர்.

**'ஆங்கவர் மனத்தின்**
**செய்கை அரனடிப்**
**போதுக் காக்கி**
**ஓங்கிய வாக்கின்**
**செய்கை உயர்ந்த**
**அஞ்செழுத்துக் காக்கி**
**தாங்குகைத் தொழிலின்**
**செய்கை தம்பிரா**
**னடியர்க் காகப்**
**பாங்குடை யுடையுங்**
**கீளும் பழுதில்கோ**
**வணமும் நெய்வார்'**
**'உடையொடு நல்ல**
**கீளும் ஒப்பில்கோ**
**வணமும் நெய்து**
**விடையவர் அடியார்**
**வந்து வேண்டுமா**
**றறியு மாற்றால்**
**இடையறா தளித்து**
**நாளும் அவர்கழல்**
**இறைஞ்சி யேத்தி**
**அடைவுறு நலத்தர்**
**ஆகி அரனடி**
**நிழல் சேர்ந்தார்'**

என்கிறது அவர் புராணம். பல்வேறு குலத்தின ராய், பல் வேறு தொழிலினராய், பல் வேறு பதத்தினராய், பல் வேறு நிலையினராயுள்ள திருத்தொண்டர்களை ஒன்று சேர்த்து ஒப்ப வைத்துத் துதிக்கின்றது திருத்தொண்டர் புராணம். யாமும் எம்மெமக்கியன்றவாற்றால் திருத்தொண்டு செய்து அத் திருத்தொண்டின் நெறி வாழ வழி செய்வோமாக.

# எனது வாழ்க்கையில் சாதுக்கள் தரிசனம்

சைவப்புலவர்மணி வித்துவான் கலாபூஷணம் வ. செல்லையா

சாதுக்கள் என்போர் சிவனடியார்களே. இவர்கள் சிவநாமத்தையே நாவால் ஓதிக் கொண்டு சிவவேடம் தாங்கி நிற்பர். பூசும் நீறு போல் உள்ளமும் புனிதர், உள்ளும் புறமும் ஒரு தன்மைக் காட்சியர். அவர்களை மதிக்காது ஆண்டி பரதேசிகள் என்று எண்ணி நகையாடுவது எவ்வளவு மதியீனம். சிவவேடதாரிகளைக் கண்டால் சிவனெனவே கொண்டு வணங்கி உபசரித்து அவர்களுக்கு வேண்டியன அளித்து வழியனுப்ப வேண்டும். அவர்களின் பாதங்களை நீரால் சுத்தி செய்து ஈரம் துவட்டி ஆசனத்தில் அமரச் செய்து உணவளித்து வழிபாடு செய்தலே மகேஸ்வர பூசையாம். அவர்கள் சிவ தொண்டில் ஈடுபட்டிருப்பதால் சிவனடியார்களாம். அவர் களைச் சிவதொண்டர்கள் என்றும் அழைக்கலாம். அன்பே பூண்டு சிவன் முதல் அனைவரிலும் அன்பு செய்து வாழ்பவர்கள் ஆதலின் அவர்கள் அன்பர்களாயினர். காரைக்கால் அம்மையாரும் “இறவாத இன்ப அன்பு” இறைவன்பால் வேண்டி நின்றார். இங்ஙனம் சிறந்து விளங்கும் தொண்டர் களாம் சாதுக்களின் உள்ளத்திலே இறைவனும் ஒடுக்கம் என்று ஔவையாரும் பாடியிருக்கிறார். பூசலார் நாயனாரும் உள்ளத்திலே கோயில் கட்டி இறைவனை அதில் எழுந்தருளப்பண்ணி வைத்து வழிபட்டிருக்கிறார். அங்ஙனம் உள்ள சாதுக்களி லும் பார்க்கப் பெரியவர்கள் உலகத்தில் யார் இருக்க முடியும்.

என் வாழ்க்கையில் இளமைப் பருவந் தொடக்கம் இன்றுவரை சாதுக்கள் தரிசனமும் அவர்களின் அருள் வாக்குகளும் கிடைத்து வருகின்றன. அவர்களின் அருள்நோக்கத்தால் என் வாழ்வு மலர்ந்துள்ளதென்பதை நான் நன்கு அறிகிறேன்.

எங்களூரில் பழனியானந்தன் சபை என்ற பழம் பெரும் சபை ஒன்று இருக்கிறது. எங்கள் மூதாதையர் அதனைத் தொடங்கி நடாத்தி வந்தனர். அதனை இப்பொழுது இளைஞர் நடாத்துகின்றனர். அச்சபை மக்களுக்குச் சைவநெறியைப் பரப்பி வருகிறது. சித்திரமேழி ஞானவயிரவர் ஆலயத்திலேயே சபை நடாத்தப் பட்டு வருகிறது. பல சைவப் பெரியார்களை அழைத்துச் சைவப் பிரசங்கங்களைச் செய்விப்பது வழக்கம். அங்ஙனம் அழைக்கப்பட்ட வர்களில் அம்பலவாணச் சுவாமியும் ஒருவர். அவர் துறவு பூண்டு சிவவேடந்தாங்கி ஒரு சாதுவாகிச் சிவதொண்டு செய்து வந்தவர். அவரின் பிரசங்கங்களை இளமைப் பருவத்தில் பழனியானந்தன் சபையிலும் எங்கள் பாடசாலையி லுங் கேட்டிருக்கின்றேன். தேவாரம், பேச்சுப் போட்டிகளில் முதலிடங்கள் பெற்று அவரது கரங் களால் பரிசுகள் பெற்று அவரின் அருள்நோக்குக் கும் ஆளானேன். பின்னர் வாலிபப் பருவத்தில் நாங்கள் சபையின் நிர்வாகத்தைப்பெற்று நடாத்தும்போது அம்பலவாண சுவாமிகளைப் பலமுறை அழைத்து உபசரித்துப் பிரசங்கங்கள் செய்வித்திருக்கிறோம். அப்போது அவர்களின் தரிசனமும் நல்லுபதேசங்களும் நிரம்பக் கிடைத் தன என் சிறு பராயம் சுவாமிகளின் தரிசனத் தால் புனிதமாகியிருக்கிறது.

நான் J. S. C வகுப்பில் படித்துக் கொண்டிருக் கிறேன். கீரிமலையில் ஒரு சுவாமி வந்திருந்தார். அவர் ஒரு அருளாளர். அவர் அருள்வாக்கு அருளுகிறார் என்று கேள்விப்பட்டேன். அங்கு சென்று அவரைத் தரிசிக்க விரும்பினேன். ஒரு நாள் அவர் தங்கியிருந்த மடத்து வாசல் கேற்றில்

காத்து நின்றேன். அவர் விரும்பினால் தான் வாசல் திறந்து விடப்படும் அன்றேல் போனவர் நின்று பார்த்து விட்டுத் திரும்ப வேண்டியது தான். எனக்கும் அந் நிலையோ என்று ஏங்கி நின்றேன். அந்நினைவு என் உள்ளத்தில் எழுந்து மறைய முன்னர் ஒருவர் வந்து வாசலைத் திறந்து அழைத்து வரும்படி சுவாமியின் கட்டளை என்றார். அகமும் முகமும் மலரச் சுவாமியைத் தரிசிக்கச் சென்றேன். சுவாமி மேடையில் உள்ள கம்பளத்தின் மீது சிவவேடந் தாங்கி வீற்றிருக் கிறார். அடியார் கூட்டமில்லை. இது வசதியான நேரம், எனக்கு அருள்வாக்குக் கிடைக்கும் என உள்ளம் பூரித்தது. நான் சுவாமியை வணங்கிப் பயபக்தி யோடு நின்றேன். அவர் கை அசைத்து அருகணைத்து எனது தேகத்தைத் தடவி உமக்கு நல்ல எதிர்காலம் உண்டு. என்னுடன் வருவாயா என்று கேட்டார். இக்கேள்வி என்னைத் திடுக்கிட வைத்தது. கேட்டவர் ஒரு சாது. அவரின் கோபத்துக்குள்ளானால் என்நிலை என்னவாகும்? அது வேறு பயம், துணிவை வரவழைத்துக்கொண்டு என்னால் தங்கள் வேண்டுகோளை நிறைவேற்ற முடியாதுள்ளது சுவாமி என்றேன். சாதுவாக நீர் வர விருப்பமில்லையோ என்றார் சுவாமி. எனக்குப் பெரிய கடமையொன்று இருக்கிறது. அதனை நிறைவேற்றினால் எனக்கு மகாதிருப்தி என்றேன். அது என்ன கடமை என்றார் சாது. எனது தாய்க்கு நான் ஒரே ஒரு மகன். தந்தையாரும் இளம் பருவத்தில் காலமாய் விட்டார். தந்தையும் தாயுமாக இருந்து என்னை வளர்த்து வருகிறார். அவரின் கடமைகளை நிறைவேற்றி விட்டுத்தான் நான் எங்கேயும் செல்ல முடியும். அது மாத்திர மல்ல தாயார் என்னை இளமையில் படிக்க வைக்க அரும்பாடுபட்டார். அப்பொழுது கல்வியை அலட்சியம் செய்துவிட்டேன். வயது வந்தபின் தான் கல்வியில் ஆர்வம் வந்தது. எத்தனை வயது வந்தாலும் படித்து விட்டுத்தான் வேறு முடிக்க வேண்டியவற்றைக் கவனிப்பது என்று உறுதி பூண்டுள்ளேன் என்று கூறிச் சாதுவை வணங்கி நின்றேன். சாதுவும் முகமலர்ந்து உம் கருமத்தில் வெற்றியீட்டி வா என்று ஆசிகூறி அனுப்பி வைத்தார். நான் மகிழ்ச்சியோடு வீடு வந்து சேர்ந்தேன்.

கொழும்பு இந்துக்கல்லூரியில் ஆசிரியனாகக் கடமை புரிந்துகொண்டிருக்கிறேன். அப்போது சித்திர முத்தடிகள் கொழும்புக்கு வருகை தருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அவரின் அடியார்கள் சிலர் என்னிடம் வந்து அடிகளின் வருகையைப் பத்திரிகையின் மூலம் அறிய வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். நான் அவர்களின் சிறப்பம்சங்களையெல்லாம் கேட்டறிந்து ஒரு கட்டுரையாகத் தொகுத்து பத்திரிகை மூலம் வெளியாக்கினேன். இதற்கு முன் அடிகளாரை நான் அறிந்திருக்கவில்லை. அவர் நிகழ்த்திய அற்புத நிகழ்ச்சிகளைப் படித்தறிந்ததும் அடிகள் மீது என் மனம் பதிந்து விட்டது. அவர் குழந்தையாக இருந்தபோது பாயில் பாம்பு வந்து படமெடுத்து ஆடிற்றாம். அக்குழந்தை சிரித்து விளையாடிற்றாம். இதனை அடிகள் பாடும்போது "குழந்தையும் தெய்வம் தானே - படுக்கையில் பாம்பு தானே" என்று அழகாகக் குறிப்பிட்டுருக்கிறார். அடிகள் குறிப்பிட்ட காலத்தில் கொழும்பு வந்து அடியார்களுக்குத் தரிசனமும் அருளுபதேசமும் புரிந்தார். நானும் அதில் ஒருவனாகக் கலந்து தரிசனமும் அருள் உபதேசமும் பெற்று மகிழ்ந் தேன்.

மிகப் பெரிய தொடர்பு கொண்ட சாதுக்கள் மூவரின் தரிசனம் பற்றி விரிவாகக் குறிப்பிட விரும்புகின்றேன். அவ் விடயம் யாவருக்கும் பயன் தரும் என்று கருதிய அதனை இங்கு விவரிக்கின்றேன். முதலில் சாதுக்களின் தரிசனத்தின் மகிமை பற்றி ரமண மகிரிஷி அவர்கள் பாடிய பாடலை இங்கு தருகிறேன். அதனைப் படித்துப் பாருங்கள்.

**'தாபந்தண் சந்திரனால் தைனியம் நற்கற்பகத்தால்**
**பாபந்தான் கங்கையாற் பற்றுமே - தாபமுதல்**
**இம்மூன்று மேகும் இணையில்லாச் சாதுக்கள்**
**அம்மா தரிசனத்தாற்றான்'**

(மிகுதி அடுத்த இதழில்)

# நம்பிக்கை

பேரறிஞர் முருகவே பரமநாதன்

நம்பினோர் கெடுவதில்லை - இது
நான்கு மறைத்தீர்ப்பு (மகாகவிபாரதி)

நம்பிக்கையென்ற ஐந்தெழுத்துச் சொல்லே இவ்வுலகைத் தாங்கி நிற்கிறது. கட்டியாளுகிறது. சிறப்பாகச் சமயமும், தெய்வமும் நம்பிக்கையிலே தான் கட்டியெழுப்பப்பட்டது. இந்த உண்மை ஆய்வு இல்லாமல் எழுந்ததென்பர். ஆதாரம் இன்றி ஆதேயம் இல்லை. அன்று முதல் இன்று வரை மக்கட் சமுதாயத்தின் மனநம்பிக்கையே ஆலமரமாகி விழுது பாய்ச்சி வேரூன்றி விசால மான விருட்சமாய் நிலை கொண்டுள்ளது. தெய்வ நம்பிக்கை, மதநம்பிக்கை இல்லாத மனிதர் இருந்தால் அவர்கள் ஒரு சமயியாக இருந்து அதை விட்டு விலகி நாஸ்திகர்களாக, நீரீச் சுரவாதிகளாக பகுத்தறிவு வாதிகளாகத் தம்மைக் காட்டிக் கொண்டவர்களே. விஞ்ஞான ரீதியிலே பார்க்கினும் மெய்ஞ்ஞான நோக்கிலே நோட்டம் விடினும் யாரோ சொன்ன கருத்தை அப்படியே ஏற்றது என்றால் அது அப்பட்டமான நம்பிக் கையே. கடவுள் நம்பிக்கை, மதநம்பிக்கை யென்ற வழக்காறு இதற்கு நல்ல சான்றாதாரம் எனலாம். எல்லாருமே சொல்கிறார். சொன்னார்கள். இரண்டும் நம்பிக்கையில் இயங்கும் உண்மை யல்லாத உண்மையென. நாம் இன்று பயணம் செய்யும் பெருஞ்சாலைகள் எப்படி வளர்ந்தன. பறவைகளும், மிருகங்களும் ஏன் மனிதப் பிராணி களும் நடந்த மீளமீள நடந்த ஒற்றையடிப் பாதை வளர்ந்து வழியாகி, கையொழுங்கையாகி, சிற்றொழுங்கையாகி, தெருவாகி, பெருந்தெரு வாகி, கப்பி வீதியாகி, தார் போட்ட பெருவீதி யாகி, பின் இராச பாட்டையாகி உலகையே தரையால் இணைக்கின்றன. இப்போ கடல் வழியும், விண் வழியும், நம்மைச் சுமந்து செல் கின்றன. இஃதேபோலத்தான் இந்த நம்பிக்கைத் தடம் கால் பதித்த வரலாறு. இது சுவடில்லாத பாதை. இறைவழியும் பாதை இல்லாத பாதை தான். பொய்யுடையொருவன் சொல்வன்மையி னால் மெய்போலும்மே. மெய்போலும் மே என அறிவு மாது அவ்வை பேசினாள். இன்றைய நீதிமன்றங்களில் விவாதிப்பார் திறனாற் குற்றவாளி சுத்த வாளியாகிறான். சுத்தவாளி மறியல்சாலை பார்க்கிறான். தென்னாபிரிக்கத் தென்முனை யொன்றிற்கு நன்னம்பிக்கைமுனை யென்ற பெயரை ஒருயாத்திரிகன் சூட்டினான். சோதிடத்தை நம்பி வாழ்பவன் தன் மன நம்பிக் கையை நழுவவிட்டு விடுகிறான். ஒவ்வொருவரின் சுயநம்பிக்கையே அவன் வாழ்வின் ஆணிவேர். கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பதும் ஒரு நம்பிக்கையில் - நம்பிக்கையே. இதை அடிதலை மாறியும் போட்டு கடவுளை நம்பினோர் கைவிடப்படுவார் என்றும் பேசிக் கொள்கிறார்கள். கடவுளை நம்பி யார் கெட்டார் என்பதற்கு உடன் பாடாகவும், ஏன் எதிர்மறையாகவும் பொருள் விரிப்பர். கடவுளை நம்பி யார் கெட்டார். ஒருவரும் கெடவில்லை என்பதே இதற்கு அர்த்தம். கடவுளை நம்பியார், கெட்டார் எனப் பகுத்துப் பார்ப்பின் கடவுளை நம்புவது வீண் வேலை. எல்லாத்துக்கும் கடவுள் கடவுள் என்று கூறிக் கெட்டது தான் கண்டமிச்சம் என எதிராக விளக்கம் கூறுவர். இரண்டும்சரி இரண்டாட்டம் உள்ள மனமுடையோர்க்கு இது தான் இரண்டும் கெட்டநிலை. (இரண்டுமிலித் தனியனேற்கே - திருவாசகம்) இப்படியோர்ந்து பார்க்கின் இந்த மூடநம்பிக்கைகள், பேய்பிசாசு கள், பெல்லி சூனியங்கள் - சோதிடங்கள், கழிப்பு கள், பார்வைகள், நூல்கட்டுதல், நாளும் கோளும் பார்த்தல் எண்சோதிடங்கள் - நாட்பார்த்தல், சாந்தி செய்தல் வாகனங்களைத் தேசிக்காய் நெரித்தும் பூசை பண்ணல், திருவிளக்குப்பூசை போல்வன எல்லாமே நம்பிக்கையின் சின்னங்களே. இன்று இவையில்லாமல் வாழமுடியாமல் வாழும் கூட்ட மொன்றையும், இதை வைத்துப் பிழைக்கும் இன்னோர் கூட்டத்தையும் நாம் நேரிற் காண் கிறோம். இதுவுமொருவித நம்பிக்கையே. பூமி யுருண்டையெனக் கண்டவன் விஞ்ஞானி. அதை நம்பி ஏற்றுக்கொண்டவன் மனிதன். ஆனால் இவன் கண்டதுமில்லை, விண்டதுமில்லை. நேரடி யனுபவமும் இல்லை. நம்பிக் கையே இதன் அடித்தளம். ஐன்ஸ்டினின் (ரி லேரிவ்தியறி) தொடர்பு விதியும் அதுதான். நம் முன்னோர் அறிந்தோ அறியாமலோ சொன்னதை ஆராயாமல் அப்படியே ஏற்றுக் கொள்வதை நம்பிக்கையென்று சொல்லாமல் வேறு எப்படிச் சொல்லலாம். மதம் அபினியென்று கார்ல்மார்க் சொன்னார். அது கார்ல்மார்க் சித்தாந்தமாயிற்று. கண்ணை மூடிக்

கொண்டு அப்படியே அட்டியின்றி ஏற்றுக் கொண்டதே தெய்வமும், அது சார்ந்த சமயமும் என்ற முடிபு பெருவிழுக்காடு ஏற்றுக் கொள்ளப் பட்ட ஒரு நம்பிக்கைதான். இதை விஸ்வாசம் Faith என்றெல்லாம் அழைக்கிறார்கள். மதத்தில் தான் விசுவாசம், நம்பிக்கை இதுவும் விசாரணைக் குட்படாத விசுவாசம் ஆகும் என்கிறார்கள் ஆய்வாளர். அறிவிற்கு வரையறை கிடையாது. இதற்கு மேல் அறிவில்லை. இவற்றை நம்புவோம் என்பதும் அறிவிற்குப் பொருந்தாது. அலையாத குட்டை நீரல்ல மரபு - குட்டைநீர் இன்றைய சைவ (இந்து) ஆலயங்கள் கடவுட் கொள்கை இயற்கை அதீத வாதங்கள் மதத்தை மனித நிறுவனமாக சமூக நிறுவனமாகக் கொள்ள வேண்டும். இஃது ஐயர் நிறுவனமன்று என்கிறார் குன்றக்குடி அடிகளார். எனவே நம்பிக்கையின் விளைவே கடவுளும், சமயமும். நம்பிக்கை எப்போ உண்மையை உணர்கிறதோ அன்று இவை பாரதி சொன்னது போல காடெலாம் சடசடென முறிந்து விறகாகும். எனவே சமயம் இல்லாத விஞ்ஞானம் குருடு - விஞ்ஞானம் இல்லாத சமயம் முடம் என்றார் ஐன்ஸ்டீன். இதை இன்றைய சைவசமய வாதிகளும் இந்து சமய வாதிகளும் மனதிற் கொள்ள வேண்டும். எத்தனை காலந்தான் நம்மை, மனிதத்தை ஏமாற்றுகிறது. ஏமாந்த காலம் போய்விட்டது. ஆகவேதான் கண்ணதாசன் ஏமாறாதே ஏமாற் றாதே எனப் பாடினான். நம்ப நட நம்பி நடவாதே என்ற தாரகம் அர்த்த புஷ்டியுள்ளது. குருட்டு நம்பிக்கையிற் சிக்காமல் நாம் வாழ வேண்டும். உண்மையிலே ஆராய்ந்து முடிபு காணாத ஆரம்ப நம்பிக்கையே கடவுள் வணக்கம். அதன் பாதையே சமயம். இந்தச் சமய நோக்கு மனிதனை சிறந்த மனிதனாக்கு தாம் என்றால் சமயம் சிறந்த நிறுவனமாக வேண்டும். இன்று நிறுவனங்களும் ஆலயங்களும் வளரும் அளவுக்குக் கொள்கை கோட்பாடுகள் நிதானப்படவில்லை. கைக் கொள்ளப்படுவதில்லை. எலுமிச்சம்பழத்தைப் பாதியாய் வெட்டிப் பிழிந்த பின் அதைப் புரட்டித் தகழியாக்கி எண்ணெய் நெய்யிட்டு விளக்கேற்றி னாற் பலனுண்டு என சைவசித்தாந்த மேதை களே சொல்ல மக்கள் திரளுகிறார்கள். அவ் வளவு எளிமையானதா தெய்வம். இதனால் தெய்வத்தை விலைக்கு வேண்ட முடியுமா. இதுவும் ஒரு விதமான நம்பிக்கையின் சின்னம் தான். ப. சோமசுந்தரம் அவர்கள் வெளியிட்ட கவிதை வடிவம் ஒன்றில் நம்புவார் யாருமில்லை. நம்புதற்கு யாருமில்லை. வாழ விருப்பமேனோ வாழ்ந்து தொலைப்பதேனோ என்று இன்றைய சமூக நிலையையும் வாழ்வின் குறைபாட்டையும் வெளிப்படுத்தினார். உலகம் ஏமாற்றுக்காரரின் கையிலே சிக்கித் தடுமாறுகிறது நம்பிக்கை, நாணயம் மனிதனை விட்டு வெகுதூரம் விலகிப் போய் விட்டமை வெள்ளிடை மலை. நம்பிக்கைத் துரோகம் மலிந்து போனது மனித சமுதாய மத்தியிலே நம்பிக் கெட்டோர் பலர். நம்பாமல் தப்பினோர் சிலர். நம்பிக்கை நட்சத்திரமாய் ஒளிர்வோர் மிகச் சிலர். நம்பிக்கை நிதியங்கள் பலரால் கொள்ளை போனதேன். மனிதனை மனிதன் நம்ப முடியாத காலம் இது. சுத்த இருதயத்துடன் தெய்வத்தை நம்பி வாழ்பவனுக்கு இடைஞ்சல் வரலாம். ஆனாலது தீயினிற் தூசாகும். பொதுவாய்ப் பார்க்கின் புனிதமான நம்பிக்கையிலே தான் சமுதாயம் ஓடுகிறது எனவும் கூறலாம். சந்தேகம் பொல்லாதது. அது சந்தோசத்தையே கெடுத்து விடும். இதை அரசனிலே வைத்துப் பேசினார் வள்ளுவர்.

**தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்**
**தீரா இடும்பை தரும்** (குறட்பா 510)

ஒருவனை ஆராயாமற் தெளிவடைதலும் ஆராய்ந்து தெளிந்த ஒருவனிடம் ஐயப்படுதலும் ஆகிய இவை நீங்காத துன்பத்தைக் கொடுக்கும் என்பது இக்குறட்பாவின் பொருளாகும். இந்த நம்பிக்கையின் பாதையிலே நடந்து மாபெரும் வெற்றி கண்டோரும் நல்ல உதாரணமாகும். எப்படியும் ஒரு நாளைக்கு விண்ணிலே பறப்போம் என்ற ரைட் சகோதரரின் நம்பிக்கை நாம் பயணம் செய்யும் விமானமாயிற்று. கிரகாம் பெல்லின் முயற்சியும் நம்பிக்கையும் ரெலிபோனை உலகுக் களித்தது. கட்புலனற்ற ஹெலன் கெல்லரின் நம்பிக்கை விழிப்புலனற்றவர்க்கு எழுத்து முறை வழி கல்வி பெற வழிவகுத்தது. காந்தியடிகளின் அசையா நம்பிக்கை என்றோ ஓர் நாள் சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்தது. அமெரிக்கா வைக் கண்டுபிடித்த அமெரிக்க வெஸ்புக்கியும், கொலம்பசும் பெற்றிருந்த அசையா நம்பிக்கை தான் இன்றைய அமெரிக்க கண்டத்தின் கண்டு பிடிப்பு. மருத்துவத் துறையின் எத்தனை அயரா ஊக்கத்தால் வந்த நம்பிக்கையின் பயன் தான். இப்படியே சமூகவியலை ஊடுருவிப்பார்ப்பின் நம்பிக்கையே அவர்களின் வாழ்வியற் தர்மத்தின் அடித்தளம் எனலாம்.

ஒரு தாய் கருப்பவதியாகிப் பிள்ளை பெறுகின் றாள். தாய் காட்டத்தான் தந்தையை அறிகிறான் மைந்தன். தாய் சொல்லில் ஏற்பட்ட நம்பிக்கையே

தான். தாய்க்குத்தான் தெரியும் தான் தாங்கும் கரு யாருடைய சேர்க்கையினால் (இணை விழைச்சு) வந்தது என்பது. சோர நாயகனுக்குப் பிறந்தாலும் தன் சொந்தக் கணவனையே அவள் குழந்தையின் அப்பாவாகக் காட்டினாலும் அது சந்தேகமற்றதாய் அமைய வேண்டும். கணவன் மனைவி இல்லறம் நடத்துதல் நம்பிக்கையிலே தான். அவள் ஒழுக்கக் கேடாய் நடக்கமாட்டாள். பணத்திற்காய் கள்ளம் கபடம் செய்யமாட்டாள். மனச்சாட்சியோடு நடப்பாள் என்ற நம்பிக்கை. இவ்வாறே அசலான இரு நண்பர்களின் உறவுக்கு நம்பிக்கை முக்கியம். முதலாளிக்கு வாய்த்த தொழிலாளி கடையிலே நம்பிக்கை மோசடி இன்றி மனச்சான்றுடன் தொழில் செய்ய வேண்டும். அரசனுக்கு வாய்த்த முதன் மந்திரி. சேனைத் தளபதிகள் தமக்கு நம்பிக்கையான வர்களிடமே ஒப்படைக்கப்படும். உடனிருந்தே கொல்லும் வியாதி போல் கழுத்தறுப்பவர்கள் நம்பிக்கைக்குரியவர்களல்லவா. நம்பிக் கெட்ட பேரும் பலர் உண்டு. நம்பிக்கையாகக் கொடுத்த பொருளை பேணிக் கொடுப்பது முக்கியம். நம்பிக்கையீனம் மனிதன்னைக் கெட்ட பெயர் வாங்க வைக்கும். பெற்ற மகளைப் பேணிப் பாதுகாத்து வளர்க்க அவள் காதலனை நம்பிக் களவாகப் போகிறாள் என்றால் பெற்றோரின் நம்பிக்கை என்னாவது. ஆத்தலைந்து போகாமல் அவர்கள் பிள்ளையின் எதிர்கால நலனிலேயே கண்ணும் கருத்துமாய் இருப்பார்கள். வயோதிபம் அடைந்த பெற்றோர் பிள்ளைகள் நம்மைப் பேணிக் காப்பார்கள் என்ற நம்பிக்கையில் மண்ணைவாரிப் போட்டு அவர்களை படபுரக்காத பிள்ளைகளும் நம்பிக்கைத் துரோகம் இழைத்தவ ராவர். உண்மையிலே சமுதாய நலம் நம்பிக்கை யின் விளைவிலேதான் தங்கியுள்ளது. இப்படிப் பல கோணங்களிலே நின்று கண் ணோடும்போது நம்பிக்கையின் சாதகங்களையும் நம்பிக்கை யீனத்தின் பாதகங்களையும் நாம் அவதானிக்க முடிகிறது. இந் நிலைப்பாட்டிற் பாரதி தெய்வத்தை நம்புவதே வழியெனப் பேசுகிறான்.

**நம்புவ தேவழி யென்ற மறைதன்னை**
**நாமின்று நம்பி விட்டோம்**
**கும்பிட் டெந் நேரமும் 'சக்தி' யென்றாலுனைக்**
**கும்பிடுவேன் மனமே!**
**அம்புக்கும் தீக்கும் விபத்துக்கும் நோவுக்கும்**
**அச்ச மில்லாத படி**
**உம்பர்க்கும் இம்பர்க்கும் வாழ்வு தரும் பதம்**
**ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்.**

(பாரதியார் கவிதைகள் ஓம் சக்தி 3)

எல்லாம் அவரவர் மன நம்பிக்கையைப் பொறுத்தது. மந்திரமுந் தேவும் மருந்தும், குருவருளும், தந்திரமும், ஞானம்தரு அருளும் பொய்யென்னிற் பொய்யாகும். மெய்யென்னில் மெய்யாகும் என்று பாடினார். ஆக கடவுள் உண்டென்றார்க்கு உண்டு. இல்லையென்பார்க்கு இல்லை. சோதிடத்துக்கு முக்கியத்துவம் கொண்டு சீவியத்தைப் பாழடிக்காதேயென்ற புதுஉண்மையை மக்களுக்கு ஊட்டத்தன் புதிய ஆத்திசூடியிலே சோதிடந்தனை இகழ் என்றார் பாரதி. மனமாசற்ற நிலையிற் களங்கமற்ற மனோதர்மமுடையோரின் இறை நம்பிக்கை பாழ்போவதில்லை. தடுமாற்றமில்லாத நம்பிக்கை, உறுதியாக இருந்தால் வெற்றியுண்டு. யாரோகட்டி வைத்த சோதிடம் மக்களைத் திப்பிலியாட்டு கிறது. சனிமாற்றம், வியாழமாற்றம் போன்ற நிகழ்வை மையமாக வைத்து வெளிநாடுகளில் பிராமணரும் சோதிடரும் செய்யும் புரட்டுகள் மக்களையே ஏமாற்றுகிறது. அதற்கு ஓமம், யாகம், நவகுண்டம், அர்ச்சனை, சாந்தி என்ற பெயரில் மக்கள், சைவமக்கள் ஏமாந்து போகிறார் கள். ஏமாற்றப்படுகிறார்கள். விஞ்ஞான யுகத்திலே யும் இப்படியான ஏமாற்றத்துக்கு இடம் அளிக்கக் கூடாது. ஏமாறுவோர் இருக்கும் அளவும் ஏமாற்று வோர் வாழ்வர். பத்திரிகைகள், றேடியோக்கள், தொலைக்காட்சிகளில் எல்லாம் விளம்பரம் தனிப் பிரசுரங்கள் கைவழி, கால்வழி மிதிபடுகிறது. படித்த சமுதாயம் இந்த மூடக் கொள்கைகளை நம்பி ஏமாறக்கூடாது. ஞானசம்பந்தரும், அருணகிரியாரும் எல்லாம் இறை செயல், எல்லாம் நல்லநாளேயென்று பாடினர். நாளும் கோளும் நலிந்தார்க்கில்லை என்பது அனுபவ மொழி.

**நாளென் செயும்வினை தானென் செயுமெனை**
**நாடிவந்த**
**கோளென் செயுங் கொடுங் கூற்றென்**
**செயுங்கும ரேசரிரு**
**தாளும் சிலம்புஞ் சதங்கையும் தண்டையுஞ்**
**சண்முகமுந்**
**தோளுங் கடம்பு மெனக்குமுன்னே வந்து**
**தோன்றிடினே**

(கந்தர் அலங்காரம் 38)

**என்பொடு கொம்பொடாமையிவை மார்பிலங்க**
**வெருதேறி யேழையுடனே**
**பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தெ**
**னுளமே புகுந்த வதனா**

**லொன்ப தொடொன்றொடேழு பதினெட்டொடாறு**
**முடனாய நாள்களவைதா**
**மன்பொடு நல்லநல்லவவை நல்ல நல்ல**
**வடியாரவர்க்கு மிகவே** (கோளறு பதிகம் 3)

ஒன்பதாம் நட்சத்திரம் ஆயிலியம் ஒன்பதோ டொன்று 10. பத்தாம் நட்சத்திரம் மகம். ஒன்பதோ டேழு (9+7=16) விசாகம். பதினெட்டாவது கேட்டை நட்சத்திரம். ஆறு திருவாதிரை. எல்லா நாளும் நல்ல நாளேயென்பது சம்பந்தர் வாக்கு. சனிக்கோர் உற்சவமூர்த்தி வைத்து சனி தோறும் விழாவயரும் புதுமுறையை வெளிநாடுகளிற் செருகியுள்ளனர் மட்டுமன்றிச் சோதிடரும் பூசகரும் ஒத்துவிளையாடுவர். ஆதிச் சைவாலயங் களிலே நவக்கிரகங்கட்குக் கோயிலே இல்லை. தமிழகத்தில் வைணவ ஆலயங்களில் நவக் கிரகம் இல்லை. யாழ்ப்பாணத்தில் மட்டும் அமைந் துள்ளன. திருவாரூரில் நவகோள்களும் தியாகேசனையே பார்த்துக்கும்பிடும் பாவனையில் அமைந்துள்ளன. இதன் கருத்து என்ன இறைவனுக்குள் நவக்கிரகங்களும் அடக்கம் என்பதேயாம். குரு இடம்பெயர்வதற்கு வியாழ பகவானுக்குப் படிமம் செய்து ஆலயத்துக்குக் கொடுத்தால் தோஷம் போய்விடுமா. சிந்திக்கச் சைவசமயிகள் தவறிவிடுகிறார்கள். நம்சமயி களின் கோழமைத்தனத்தைக் கண்டு பாரதியார் நெஞ்சு பொறுக்குதில்லையே இந்தநிலை கெட்ட மனிதரை நினைந்துவிட்டால் என்று பாடினார்.

**நெஞ்சு பொறுக்குதில்லையே - இந்த**
**நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்**
**அஞ்சி யஞ்சிச் சாவார் - இவர்**
**அஞ்சாத பொருளில்லை அவனியிலே**
**வஞ்சனைப் பேய்கள் என்பார் - இந்த**
**மரத்தில் என்பார் அந்தக் குளத்தில் என்பார்**
**துஞ்சுது முகட்டில் என்பார் - மிகத்**
**துயர்ப்படுவார் எண்ணிப் பயப்படுவார்**
(பாரதசனங்களின் தற்கால நிலைமை)

**ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி**
**அலையும் அறிவிலிகாள் - பல்**
**வாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண்**
**டாமெனல் கேளீரோ?**
**மெள்ளப்பல தெய்வங்கள் கூட்டி வளர்த்து**
**வெறுங்கதைகள் சேர்த்துப் - பல**
**கள்ள மதங்கள் பரப்புதற் கோர்மறை**
**காட்டவும் வல்லீரோ?** (அறிவே தெய்வம் 1-9)

**தெய்வம் பலபல சொல்லிப் - பகைத்**
**தீயை வளர்ப்பவர் மூடர்**
**உய்வதனைத்திலும் ஒன்றாய் - எங்கும்**
**ஓர் பொருளானது தெய்வம்** (முரசு)

இப்படிப்பர-பல தெய்வங்களை ஏற்காத பாரதி சுத்த அறிவே சிவம் என்று பாடினார்.

**சுத்த அறிவே சிவமென்று கூறுஞ்**
**சுருதிகள் கேளீரோ - பல**
**பித்த மதங்களி லேதடு மாறிப்**
**பெருமை யழிவீ ரோ?** (அறிவே தெய்வம் 3)

சிவத்தோடு சம்பந்தம் உடையது சைவம். எமது சமயம் சைவம். சிவனையே நம்பி வழிபடுவோர் சைவசமயிகள். சிவம் என்றால் மங்களம் - சாந்தம். இன்பம் எனப் பலபொருள்படும். எனவே சிவமென்பதும் அத்தனை குணங்களையும் ஒருசேர உடையவன் என்று பொருள்படும். அவனைப் பற்றிய பேருக்கு அத்தனை நலன் களும் விளையும் என்க. சிவன் என்பதற்கு பெரிய புராண சூசனத்தில் ஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் எல்லார் உள்ளத்திலும் தங்குபவன் எனப் பொருள் கண்டமை சிந்தித்தற்குரியது.

**திருவாசகம் மகாவித்துவான் தண்டபாணி**
**தேசிகர் உரைபக்கம் 16** (பாகம் 1)

சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால் என்பது சிவபுராணம். சிவனெனும் நாமம் தனக்கே யுடைய செம்மேனி எம்மான் என்பது அப்பர் வாக்கு. எனவே இறைவனுக்கு சிறப்புத் திருநாமம் சிவன் என்பதாகும். அவன் சதாசிவன் அவனைப் பெரியசிவன், சின்னச்சிவனெனப் பேசுவது சிவத் துரோகமாம்.

பொது நோக்கிலும், சிறப்பு அவதானிப்பிலும் நம்பிக்கையின் தரம் சுருக்கமாய் ஆராயப்பட்டது. வெளிநாடுகளிலும் தாய் நாட்டிலும் காலம் காலமாய் வளர்ந்துவரும் வளர்த்துவரும் போலி நம்பிக்கைகளுக்கு இடம் கொடாமல் - மூட நம்பிக்கைகளைக் களைந்து புனிதமான சமய வாழ்க்கையை மேற்கொண்டு மேலோங்குவோமாக. உடையை, உணவை, நடையை, நாகரிகத்தை, கலை கலாசார பழக்க வழக்கங் களை மாற்றி நாம் சினிமா உலகிற்கலக்காமல் நல்ல சமுதாயத்தை உருவாக்க உழைப்போம். உயர்வோம்.

**எப்பொருள் எத்தன் மைத்தாயினும் அப்பொருள்**
**மெய்ப் பொருள்காண்பது அறிவு** (திருக்குறள் 315)

**நம்பநட நம்பி நடவாதே**
**ஏமாறாதே ஏமாற்றாதே**
**நம்பிக்கையே சமயம் கடவுள்**
**ஆண்டவனே நம்பிக்கை அடைக்கலம்**
**தும்பிக்கையானே நம்பிக்கை**

உ
சிவமயம்

திருக்கைலாய குரு பரம்பரை தினம்

சைவசித்தாந்த ஆசிரியர் சைவப்பெரியார்

# சிவபாத சுந்தரனார் குருபூசை

நிகழும் மங்களகரமான பார்த்திப **ஆண்டு ஆடித் திங்கள் 25 ஆம் நாள்** (13.8.2005) **சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு,** கோலாலம்பூர் எண்.3, லோரோங் ஸ்கொற்றில் அமைந்துள்ள **கலா மண்டபத்தில் 28 ஆவது திருக்கைலாய குருபரம்பரை தினமும் சைவசித்தாந்த ஆசிரியர் சிவபாத சுந்தரனார் குருபூசை** கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரலின்படி நடைபெறும். இதனை சைவ சித்தாந்தக் கலாநிதி, சைவசித்தாந்தப் பெரியார், சித்தாந்த சரபம் டான் ஸ்ரீ. மு. சோமசுந்தரம் அவர்கள் தலைமை ஏற்று நடத்த இசைந்துள்ளார்.

சைவத் திருமுறைகளையும் **சித்தாந்த சாத்திரங்களையும்** சைவர்கள் யாவரும் அறியவேண்டும் என்னும் அவாவுடன் நடத்தப்பெறும். இக்குருபூசைக்கு யாவரும் குடும்பத்துடன் வருகை தந்து மெய்யுணர்வும் இறையருளும் பெற்றுய்யுமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

## நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| மாலை 5.00 மணிக்கு | - ***தீபாராதனை***, அருள்நெறிப்புரவலர், சைவசிகாமணி மா.சுப்பிரமணியம் அவர்கள் |
| 5.05 | - ***இறைவணக்கம் :*** சிவத்திரு ஐ. குலவீரசிங்கம் அவர்கள் |
| 5.10 | - ***தலைவர் உரை :*** சைவசித்தாந்த கலாநிதி, சைவசித்தாந்தப் பெரியார், சித்தாந்த சரபம் டான் ஸ்ரீ மு. சோமசுந்தரம் அவர்கள் |
| 5.20 | - ***பக்திப் பாடல்கள் :*** திருச்செல்வி ஸ்ருதி ஜெயசங்கர் |
| 5.40 | - சமயக்குரவர், திருக்கைலாய குருபரம்பரை துதி. அருள் நெறிச் செல்வர், குரு சேவாரத்னா செ. நவரத்தினம் அவர்கள் |
| 5.55 | - ***சொற்பொழிவு***, முப்பொருள் இயைபு. சித்தாந்தச் செல்வர், சைவசிகாமணி ஆறு நாகப்பன் அவர்கள். |
| 6.40 | - ***தலைவர் நிறைவுரை.*** |
| 6.50 | - ***நூல் வெளியீடு :*** முப்பொருள் விளக்கம் (யாழ்ப்பாணம் அச்சுவேலி, சரஸ்வதி வித்தியாசாலை மனேசர் சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் இயற்றியது. ***வெளியீடு :*** சிவநெறிச் செல்வி புவான் ஸ்ரீ தெய்வானை சோமசுந்தரம் அவர்கள். |
| 7.10 | - நன்றி நவிலல் அருள்நெறிப் புரவலர், சைவசிகாமணி மா. சுப்பிரமணியம் அவர்கள். ***தீபாராதனை – பிரசாதம் வழங்குதல்.*** |

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

**கலாமண்டபம்**
**எண்3, லோரோங் ஸ்கொற்**
**50470 கோலாலம்பூர்**

**இங்ஙனம்**
**சு. கிருஷ்ண குமார்**
**(செயலாளர்)**
அறங்காவலர்கள் உத்தரவின்படி

*குறிப்பு : நிகழ்ச்சி குறிப்பிட்டுள்ள நேரத்தில் தொடங்கப்படும்.*

கொழும்புத் தமிழ்ச் சங்கப் பண்டித மாணவர்கள் சார்பாக

அமரர் **பண்டிதர் சரவணமுத்து சுப்ரமணியம்** அவர்கள்

சிவபதம் அடைந்ததையிட்டுச் சாற்றிய வெண் மலர்



சுப்ரமணி அய்யா சுபநாளி லெப்போதும்
இப்புரம் வந்தே இலக்கணத்தை - துப்புரவு
செய்தார் துறைபோனார் சுப்ரமணி காவியத்தில்
பெய்தார் குமாரசம்ப வம்.

பண்டிதர் ஆனாலுமே பாமரனாய் இங்கே
தொண்டென வந்து தமிழ்தந்தார் - உண்டிருந்து
வாழாது மெய்யறிவு காட்டிநின்ற மேதை
திருசுப் ரமணிஐ யா

இலக்கண இன்பம் இலக்கியத்திற் காட்டி
துலக்கிய பண்டிதத் தூயோன் - இலட்சிய
வாழ்வின் இலக்கணம் கண்ட இசைஞன்
திருசுப் ரமணிஐ யா

ஆறுமுக நாவலர் ஆக்கிய பாதையிலே
வீறுநடை போட்டநல் வித்தகன் - நானுஞ்
சைவத்தமிழன் நாளும் சிவத்தொண்டன்
திருசுப் ரமணிஐ யா

எண்பத்தோர் ஆண்டு எடுத்த பணியினை
கண்வைத்துச் செய்தவோர் கர்மவீரன் - மண்விட்டுச்
செல்கிறார் மா மனிதன் இந்த நாளு மோர்நாளோ
புண்பட்டு வேகிறோம் காண்.

சிவராசசிங்கம் கந்தசாமி

# நினைவிற் கொள்வதற்கு

பார்த்திப

புரட்டாதி

| | | | |
|---|---|---|---|
| 01 | 17.09.2005 | சனி | மாதப்பிறப்பு, பூரணை விரதம், உமாமகேஸ்வர விரதம் |
| 02 | 18.09.2005 | ஞாயிறு | மஹாளயபக்ஷாரம்பம் |
| 04 | 20.09.2005 | செவ்வாய் | உருத்திர பசுபதியார் குருபூசை |
| 05 | 21.09.2005 | புதன் | சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| 06 | 22.09.2005 | வியாழன் | கார்த்திகை விரதம் |
| 07 | 23.09.2005 | வெள்ளி | திருநாளைப் போவார் குருபூசை |
| 14 | 30.09.2005 | வெள்ளி | பிரதோஷ விரதம் |
| 15 | 01.10.2005 | சனி | அருணந்திசிவாசாரியார் குருபூசை |
| 16 | 02.10.2005 | ஞாயிறு | கேதாரேஸ்வர விரதம் |
| 17 | 03.10.2005 | ஞாயிறு | அமாவாசை விரதம் மஹாளயபக்ஷ முடிவு |
| 18 | 04.10.2005 | செவ்வாய் | நவராத்திரி விரதாரம்பம் |
| 21 | 07.10.2005 | வெள்ளி | சதுர்த்தி விரதம் |
| 23 | 09.10.2005 | ஞாயிறு | ஷஷ்டி விரதம், சரஸ்வதி பூஜாரம்பம் |
| 25 | 11.10.2005 | செவ்வாய் | மஹாநவமி விரதம், சரஸ்வதி பூஜை ஏனாதிநாதர் குருபூசை |
| 26 | 12.10.2005 | புதன் | விஜயதசமி, கேதாரகௌரி விரதாரம்பம் |
| 28 | 14.10.2005 | வெள்ளி | நரசிங்கமுனையார் குருபூசை |
| 29 | 15.10.2005 | சனி | சனிப்பிரதோஷ விரதம் |
| 30 | 16.10.2005 | ஞாயிறு | நடேசரபிஷேகம் |
| 31 | 17.10.2005 | திங்கள் | பூரணை விரதம் |

Registered as a NewsPaper at the G.P.O.

உ
சிவமயம்

# புத்தக விற்பனை

- விதியை வெல்வது எப்படி?
- திருவாசகம்
- Understanding Saiva Siddhanta Philosophy.
- And Outline of Saivism
- சைவத்தை அறியுங்கள்
- சிவபுராணம் விளக்கவுரை
- வள்ளுவம் வழங்கும் தமிழ் தத்துவம்
- உயர்வுமிகு சைவசமயம் உடன்பாடற்ற வழிபாடு (பிற அறிஞரின் கட்டுரைகளின் தொகுப்பு)
- தத்துவ உலகில் தடம் பதித்த பண்டிதர் மு.கந்தையா
- ஈழத்துச் சித்த சிரோமணிகள்
- நல்லை ஆதீன முதல்வர் நற்சரிதம்

ஆகிய நூல்கள் விற்பனைக்கு உண்டு

**கிடைக்கும் இடம்:**

**சைவநீதி**

**195, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு–13.**

எங்களிடம்,

ஐம்பொன், வெள்ளி, பஞ்சலோகம் வார்ப்பு விக்கிரகங்கள், வீட்டுப்பூசைப் பொருட்கள், கலைநயம் மிக்க சிலா விக்கிரகங்கள், கோபுரக்கலசங்கள், பட்டுக்குடைகள், கும்பக் குடைகள், சந்திரவட்ட, பூச்சக்கரக் குடைகள், ஆலவட்டம், சுருட்டி மகர தோரணம், திரைச் சீலைகள், வெள்ளி, முத்து, கிரீடங்கள், வாக மாலை மற்றும் மின்சார மங்கள வாத்தியங் கள், இந்திய கலைத்திறம் படைத்த குத்து விளக்குகள், வீட்டு அலங்காரப் பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கும்.

**கலையரசி**

23/1, விவேகானந்த மேடு, கொழும்பு-13.

தொ.பே: 2478885

## சைவநீதி மாத இதழ்

**பெறுமதி விபரம்**

தனிப் பிரதி ரூபா 25.00 ஆண்டொன்றிற்கு ரூபா 250.00 ஏனைய நாடுகளில் ஆண்டொன்றிற்கு ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது US$ 15

சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.

சந்தா அனுப்பவேண்டிய முகவரி

*C. Navaneethakumar,*
*No. 30, Ramya Road,*
*Colombo - 04.*
*Sri Lanka.*
*Tel : 2580458*

Regd No. QD/27/News 2005 இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால் லக்ஷ்மி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.